Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 16 (18.06.2003) புதன்கிழமை இதழ்: 258

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-884)

# படையினரின் அத்துமீறலை அனுமதிக்க இயலாது; கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் எடுத்துரைப்பு!

## இளம்பரிதியுடன், புதிய பொறுப்பதிகாரி நேற்று முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் விடுதலைப் புலிகள் அலுவலகங்கள் மீதான சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் போராளிகள் மீதான கெடுபிடிகள் தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று யாழ்.நகரில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

நேற்றுக்காலை 9 மணியளவில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பொற்பதி வீதியிலுள்ள யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில், இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டப் புதிய பொறுப்பதிகாரியான, கரினா எரிக்சன் மற்றும் அவரது உதவியாளரும்,

விடுதலைப் புலிகளின் தரப்பில்- யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் அரசியற்துறையைச் சேர்ந்த நிஷாந்தன், சுதா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது - இரண்டு தரப்பினராலும் பல விடயங்கள் ஆராயப்பட்டன. இதன்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்திக் கூறப்பட்டன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகளின் நடமாடும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் வகையில், இராணுவத்தினர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு அறிக்கை இன்று?

விடுதலைப் புலிகளின் எண்ணெய்க்கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான கண்காணிப்புக் குழுவின் உத்தியோகபூர்வ அறிக்கை இன்று வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜூலை முதல் வாரத்தில் வருகிறார் அகாஷி!

(கொழும்பு)

ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி, அடுத்தமாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காகவும், வட - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித்திட்ட நடவடிக்கைக (10 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கில் நடக்கும் கொலைகள்; கண்காணிப்புக்குழு தலையிடாது!

## சட்டவிசாரணை மட்டுமே என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் அண்மையில் இடம்பெற்று வரும் கொலைகளுக்கும், புரிந்துணர்வு உடன்பாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதால், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு இந்த விவகாரத்தில் தலையிடத் தேவையில்லை என்று, நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இந்தக் கொலைகள் குறித்து, சாதாரண குற்றவியல் சட்டங்களின் கீழேயே விசாரணைகளை மேற்கொள்ள முடியும். இப்போதுள்ள சட்டங்களுக்கு மேலதிகமான எந்த ஏற்பாடுகளும் இதற்குத் தேவையில்லை.

அரசியல் கட்சிகளுக்கான பாதுகாப்பை அதிகரிக்குமாறு விடுக்கப் (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு விவகாரம்

# பழியிலிருந்து விலக ரணில் தீவிர முயற்சி!

## தமக்குத் தெரியாமல் நடந்ததெனக் கூறுகிறார்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் பற்றி தமக்கு எதுவும் தெரியாதெனவும்,**

**அனைத்தும் நடந்துமுடிந்த பின்னரே- பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரியப்படுத்தப்பட்டதாகவும், அதன்பின்பே தனக்குத் தெரியவந்ததாகவும், நேற்று கொழும்பில் தனது அமைச்சரவைச் சகாக்களிடம் பேசும்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.**

கொழும்பில் நேற்றுப்பகல் அமைச்சர்களுடன் நடத்திய முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சிகளில் ஒன்றாகவே - விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தைக் கருத வேண்டியுள்ளது.

சர்வதேசக் கடற்பரப்பில், விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட தாக்குதலைக் கட்டளையிட்டு வழிநடத்தியவர்கள் யார் என்பது குறித்து, ஒவ்வொரு தரப்புக்களிடமிருந்தும் முரண்பட்ட தகவல்கள் வெளிவந்து கொண்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

மேலும் - இத்தாக்குதல் நடைபெற்ற சமயம், கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஹவாய்த் தீவில் தங்கியிருந்தார். தாக்குதல் முடிவடைந்த பின்னரே அவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கும், இத்தாக்குதல் குறித்து உடனடியாகத் தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அவரது பணிப்புரைகள் எதுவும் இவ்விடயத்தில் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

இச்சந்திப்பில் - ரோக்கியோ மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்தும், பெற்றுக்கொண்ட நிதியுதவிகள் பற்றியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுக்கு விளக்கிக்கூறியதாகத் தெரியவருகிறது.

(200,01)

### விண்ணாணம் விநாசியர்



உப்பிடி ஒவ்வொருத்தரும் தெரியாதெண்டால், நாட்டை நடத்திறது பேயோ.. பிசாசோ....?

# புலிகளால் குறிப்பிடப்பட்ட இடம்; 24 மணி நேரப் பயணத்திற்குரியது

## கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இடங்களை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கடல் வழியாகச் சென்று அவதானித்தனர்.

கடற்படையின் 'சக்தி' என்ற கலத்தில், இரண்டு கண்காணிப்புக்குழு அதிகாரிகள் புலிகள் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று அவதானித்தனர். கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாகப் புலிகள் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்ல, 24 மணிநேரம் எடுத்ததாக குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

புலிகள் குறிப்பிட்ட இடத்திற்கும், கடற்படையினர் குறிப்பிட்ட இடத் (10 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போன படையதிகாரி திம்புலாகல காட்டில் சடலமாக!

## அருகே சுயநினைவற்ற பெண்ணும் மீட்பு

(பொலநறுவ)

ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் கடமையில் இருந்தபோது, காணாமற்போன இராணுவ சார்ஜன்ட் ஒருவரின் சடலம், அழுகிய நிலையில் மீட்கப்பட்டதுடன்,. இராணுவ வைத்தியசாலையில் பணியாற்றும் தாதி ஒருவரும், அச்சடலமருகே சுயநினைவிழந்த நிலையில், காட்டுப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.

பொலநறுவ மாவட்டம் - அரவகன்வில காட்டுப்பகுதியில் உள்ள திம்புலாகலவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

திம்புலாகல காட்டுப்பகுதியில் உள்ள பழைய விகாரைக்கு அருகில், காட்டில் துர்நாற்றம் வீசுவதாக பிக்கு கொடுத்த தகவலையடுத்து, பொலிஸார் அப்பகுதியில் தேடுதல் நடத்தினர்.

இதன்போது - அரைகுறையாக, அழுகிய நிலையில், அரைநிர்வாணமாக ஆண் ஒருவரின் சடலமும், அரை (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க உயரதிகாரி இன்று யாழ். வருகிறார்!

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க தூதகரகத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர், இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திலுள்ள அமெரிக்க நிலையத்தின் வதிவிடப்பிரதிநிதியான, செல்வி கோடி டெய்லர் என்பவரே (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி செயலகம்-கடற்படைத்தரப்பு வெளியிட்ட தகவல்களில் முரண்பாடு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கப்பல் கிழக்குக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, ஜனாதிபதி செயலகமும், கடற்படையும் வெளியிட்ட தகவல்களில் முரண்பாடுகள் இருப்பதாகவும், அதற்குக் காரணம் என்னவென்பது குறித்தும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கேள்வி எழுந்துள்ளது.

புலிகளின் கப்பலை மூழ்கடிக்குமாறு ஜனாதிபதியே உத்தரவிட்டதாகவும், இதன்படியே- கடற்படையினர் கப்பலைத் தாக்கி மூழ்கடித்ததாகவும் ஜனாதிபதி செயலக அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ஆனால், கடற்படைப் பேச்சாளர் வெளியிட்டுள்ள தகவலில், புலிகளின் கப்பல் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியபோதும் - அதை மூழ்கடிக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இதேபோல - புலிகளின் கப்பல் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
Expo Aviation (Pvt) Ltd.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# நிரந்தர நியமனம் பெற்றுள்ள தொண்டராசிரியர்கள் விபரம்

வடக்கு -கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட தொண்டராசிரியர்களின் பெயர் விபரங்கள் நேற்றைய நமது ஈழநாட்டில் வெளியாகியது. மேலும் சில கல்வி வலயங்களில் நியமனங்களைப் பெற்ற தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் இன்று வெளியாகின்றன.

**தென்மராட்சி கல்விவலயம்**

எஸ்.பவனீதாரணி (கோயிலாக் கண்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஆர்.ரதீஸ்வரி (இத்தாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), கே.மல்லிகாதேவி (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை), பி.அமிலா (கைதடி கலைவாணி வித்தியாலயம்), வி.சாந்தகௌரி (மட்டுவில் தெற்கு சந்திரோதய வித்தியாலயம்), என்.உதயராணி (வரணி வடக்கு ஸ்ரீசைவப்பிரகாச வித்தியாலயம்), எஸ்.ரஜிதா (நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.சுதாஜினி (மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்), கெ.சந்திரிகா (சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்), எஸ்.யசோதா (எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)

**தீவகக் கல்விவலயம்**

என்.சித்திரா (வியாவில் சைவ வித்தியாலயம்), கே.தேவமலர் (வியாவில் சைவவித்தியாலம்), ஆர்.சோதீஸவரி (அனலைதீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)

யூடி.பெர்னாடில் (எழுவைதீவு றோமன் தமிழ்க்கலவன் பாடசாலை), வி.உமாரஞ்சினி (புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), கே.சுபதா (நாரந்தனை கணேசா வித்தியாலயம்), டி.யசோதினி (புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), ரி.சுகந்தினி (புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்).

**முல்லைத்தீவு கல்விவலயம்**

எம்.சந்திரமதி (கோம்பாவில் விக்கினேஸ்வரா), ஏ.திரேசராணி (மன்ன கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.அருட்செல்வி (உடையார்கட்டு மகாவித்தியாலயம்), எம்.உதயசிறி (குரவில் த.வி.), எஸ்.கனகேஸ்வரி (தேராவில் த.வி.), ரி.தமிழரசி (தேராவில் த.வி.), ரி.எழில்ரசி (தேராவில் த.வி.), கே.ரஜிதா (தேராவில் த.வி.), ஆர்.சறோஜினி தேவி (தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை), ரி.கருணாகரன் (அமபலவன் பொக்கணை அ.க.த.பாடசாலை), பி.பத்மலதா (புதுக்குடியிருப்பு ம.வி.), ரி.ஜீவானந்த் (வள்ளிபுனம் அ.த.க.பாடசாலை), எஸ்.செல்வரத்தினதேவி (பாரதி வித்தி), ஏ.சுவந்தி (உடுப்புக்குளம் அ.த.க. பாடசாலை), வை.சுகந்தமாலா (குரவில் த.வி.), கே.பிறமீலா (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க. பாடசாலை), கே.சிவானந்தி (அம்பலவன் பொக்கணை அ.த.க. பாடசாலை), எஸ்.இந்திரன் (முல்லைத்தீவு ம.வி.), எஸ்.சுந்தரகுமாரி (அலம்பில் றோ.க. பாடசாலை), ரி.ரஜனி (பாரதி வித்தி), ஈ.யோகாம்பிகை (வித்தியானந்தாக் கல்லூரி), எஸ்.மனோரஞ்சிதம் (இருட்டுமடு த.வி.) எஸ்.கண்ணதாஸ் (விசுவமடு த.வி), எஸ்.தர்மினி (விசுவமடு ம.வி.), பி.வசந்தி (உடுப்புக்குளம் அ.த.க. பாடசாலை), எம்.கவிதா (வற்றாப்பளை ம.வி.), எம்.சகுந்தலாதேவி (வற்றாப்பளை ம.வி.), வீ.அஞ்சனாதேவி (கருணாக்கட்டுக்கேணி அ.த.க.பாடசாலை), எஸ்.சித்திரலேகா (வள்ளிபுனம் ம.வி.), எஸ்.கீதாபத்மசிறி (வள்ளிபுனம் ம.வி.). கே.செந்தில்வேல் (கலைமகள் அ.த.க.பாடசாலை), ஜே.அமலராணி (வள்ளிபுனம் ம.வி.), நிதி (வள்ளிபுனம் ம.வி.), கே.வளர்மதி (வள்ளிபுனம் ம.வி.), ரி.சுபோதினி (அரசரத்தினம் வித்தியாலயம்), கே. பாக்கியவதி (குமுழமுனை ம.வி.), கே.விஜிதா (குமுழமுனை ம.வி.), ரி.சிவாஜினி (ஆறுமுகத்தான்குளம் அ.த.க. பாடசாலை),

எஸ்.சுதர்சனா (கலைமகள் அ.த.க.பாடசாலை), கே.இந்திரகலா (உடுப்புக்குளம் த.வி.), எஸ்.பரமேஸ்வரன் (வித்தியானந்தாக் கல்லூரி) எஸ். ஜெயவதனா (முள்ளியவளை அ.த.க. பாடசாலை), எஸ்.அன்னலட்சுமி (இருட்டுமடு த.வி.), வி.விக்கினேஸ்வரராஜா (செம்மலை த.வி.), ஜி.தனேஸ்வரன் (செம்மலை த.வி.), ஏ.றொபின்சனா (அலம்பில் றோ.க.),

ஏ.சுதர்சினி (கள்ளப்பாடு அ.த.க.பா.), கே.மஞ்சித்தா (அரசரத்தினம் வித்தியாலயம்), பி.ஜே.எட்விசியா (இரணைப்பாலை றோ.க.), ஆர்.பாமினி (தேவிபுரம் அரச த.க.பா), எப்.செல்வமலர் (புதுக்குடியிருப்பு றோ.க. பாடசாலை), எஸ்.கமலாம்பிகை (அம்பலவன் பொக்கணை), எஸ்.பிரசன்னா (விசுவமடு ம.வி.), மி.கிருஷ்ணானந்தன் (அலம்பில் றோ.க.), ரீ.பாமினி (சிலாவத்தை றோ.க.), என் சிறிகாந்தன் (முள்ளியவளை றோ.க.), ரி.சொபியாழினி (வலைஞர்மடம் அ.த.க.பா.), கே. சபாஜிதன், (கொக்குத்தொடுவாய் அ.த.க.பா.), என்.ஜெயவதனி (சிறி சுப்பிரமணியம் வி.).

ஏ.ஏ.ஜிவிதராணி (அலம்பில் றோ.க.), எஸ்.செல்வநிலா (புதுக்குடியிருப்பு ம.வி.), ஏ.அருளானந்தம் (பாரதி வித்தி.), எம்.எம்.ஜொசப்பின் (முல்லைத்தீவு றோ.க.), எஸ். நளினி (வள்ளிபுனம் கே.வி.), கே. கருணாதேவி (இரணைபாலை றோ.க.), எம்.தர்சினிமாலா (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), ஏ.வசந்தமலர் (வித்தியானந்தாக் கல்லூரி), எஸ்.தேவமணி (முள்ளியவளை றோ.க.வீ.),

ரி.சிறிநந்தினி (விசுவமடு ம.வி.), பி.சந்திரகலா (சுதந்திரபுரம் அ.த.க.பா.), பி.சாந்தரூபன் (வற்றாப்பளை ம.வி.), எஸ். சிவரூபி (புதுக்குடியிருப்பு றோ.க.), ஜே.சிறிதேவி (கலைமகள் வி.), எம்.அனுசியா (வேணாவில் சிறிமுருகானந்தா வி.), ஏ.எம்.ஏ.கசில்டா (முள்ளிவாய்க்கால் மேற்கு, கே.வி.), ரி.கிருஸ்ணலதா (உடையார்கட்டு ம.வி.), ஆர்.சுஜாதினி (இருட்டுமடு அ.த.க.பா.), எஸ். திவரங்கன் (தேவிபுரம் அ.த.க.பா.), எஸ்.சந்திரகுமாரி (கேப்பாப்புலவு அ.த.க.பா.), எஸ்.குமுதினி (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை).

**கிளிநொச்சி கல்விவலயம்**

பி.விபோஜனா (தர்மபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), பி.சுபாஜினி (வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), பி.கே.பெனடிற்றா (உமையாள்புரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), கே.ராகினி (பரமங்கிராய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.நகுலேஸ்வரி (பூநகரி மகாவித்தியாலயம்), ஆர். உதயவதனி (பூநகரி மகாவித்தியாலயம்), ரி.கீதாஞ்சலி (கல்மடுநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை).

எஸ்.சாரதாதேவி (ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஆர்.விஜயலட்சுமி (ஒட்டறுத்தபுலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), வி.எம்.பி. டெனிஜியா (வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), எம்.ஜெகதீஸ்வரன் (பாரதி வித்தியாலயம்), கே.பரிமளகாந்தி (இராமநாதன் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஏ.மேரிநிலா (வேரவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஜி.விணோதினி (ஆனைவிழுந்தான்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.ஜெயந்தினி (திருவையாறு மகாவித்தியாலயம்), வி.கோகிலா (கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஜி.நிர்மலவதனி (ஜெயபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), வி.ஜெயசீலன் (கண்டாவளை மகாவித்தியாலயம்), கே.ரேணுகாதேவி (அக்கராயன் மகாவித்தியாலயம்), பி.இளஞ்செழியன் (முருகானந்தா மகாவித்தியாலயம்).

வி.மாதுளன் (பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம்), கே.கோகிலன் (ஆனையிறவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.ஜினோவா (ஒடடுப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.மகேந்திரராசா (கிளிநொச்சி மத்தியகல்லூரி), வி.சசிகுமார் (முருகானந்தா மகாவித்தியாலயம்), எஸ்.ஸ்ரீமாலினி (புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்), பி.பாக்கியானந்தி (அக்கராயன் மகாவித்தியாலயம்), எஸ்.மங்களேஸ்வரி (ஐயனார்புரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.மஞ்சுளா (அக்கராயன் மகாவித்தியாலயம்), வி.கேமாவதி (பூநகரி மகாவித்தியாலயம்), எஸ்.கனிஸ்ரெலா (செம்பன் குன்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை).

ஆர்.செல்வநாதன் (முருகானந்தா மகாவித்தியாலயம்), என்.ருக்குமணி (செம்பன்குன்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), கே.நித்தியகலா (புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்), எஸ்.விக்னேஸ்வரன் (இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), கே.அசோக்குமார் (கிளிநொச்சி மத்தியகல்லூரி), வி.புதுமலர் (புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்), வை.கீதாஞ்சலி (இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), ஜே.சிவசோதி (உமையாள்புரம் மகாவித்தியாலயம்), ரி.சற்சதிபதி (பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலை), என்.சபாநாயகம் (வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம்), வி.மலர்விழி (செம்பன்குன்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.அன்புநிதி (புதிய புன்னைநீராவி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.அனுபாமா (பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம்), எஸ்.சசிகலா (பன்னங்கண்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), கே.இரஞ்சிதமலர் (சாமிப்புலவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), பி.மயோறொக்கி (வள்ளிப்பாடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்), ரி.சுபதினா (வள்ளிப்பாடு றோமன் க.வித்தியாலயம்), எ.றதீகா (வள்ளிப்பாடு றோமன் க.வித்தியாலயம்), என்.சிவானந்தி (முழங்காவில் வித்தியாலயம்), எஸ்.நகுலேஸ்வரியம்மா (சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்), எஸ்.நேசநாயகம் (கௌதாரிமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை).

எஸ்.அகிலேஸ்வரி (அக்கராயன் மகா வித்தியாலயம்), எஸ்.அருளானந்தசிவம் (உமையாள்புரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.வளர்மதி (ஆனையிறவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), பி.பத்மராஜி (முழங்காவில் மகா வித்தியாலயம்), வை.சுதர்ஜினி (கிளிநொச்சி சென் திரேசா மகளிர் கல்லூரி), யு.குணசீலன் (மட்டுவில்நாடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எம்.சிவமோகன் (பூநகரி மகாவித்தியாலயம்), பி.கௌசல்யா (சென் அன்ரனீஸ் வித்தியாலயம்), ஆர்.கோமதி (சென் அன்ரனீஸ் வித்தியாலயம்), ஆர்.நித்தியா (இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.வசந்தசசிகலா (புன்னைநீராவி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.சண்முகலிங்கம் (இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), ஆ.வாசுகி (கிளி. நாகேந்திரா வித்தியாலயம்), ஏ.சி.தவராணி (ஆனையிறவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஆர். ராகினி (நாகேஸ்வரா வித்தியாலயம்), கே.செல்வராசா (கனகபுரம் மகாவித்தியாலயம்).

எஸ்.சின்னையா (ஒட்டுப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), பி.ஆர்.தவச்செல்வி (பன்னங்கண்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.பழனிவேல் (நாகேந்திரா அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.றூபாகினி (கண்டாவளை மகா வித்தியாலயம்), எஸ்.சிவதரன் (கறுக்காத்தீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஜி.விஜயரஜினி (பன்னங்கண்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.தேவரஞ்சினி (யூனியன்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), கே.மனோகரன் (பன்னங்கண்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.யசோதா (பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்), எம்.விஜயலதா (வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), என்.கவியரசி (இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), எஸ்.நளாயினி (இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), எஸ்.கலாநிதி (கல்மடு நகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), வி.லோகேஸ்வரி (கனகாம்பிகைக்குளம் மகா வித்தியாலயம்), எஸ்.சுபாஜினி (நாகேஸ்வரா வித்தியாலயம்), வி.நாகமணி (இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை).

எஸ்.செல்வராணி (புன்னைநீராவி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), வி.ஜெயசுதன் (பிரமந்தனாறு மகாவித்தியாலயம்), ஆர்.குமுதினி (பிரமந்தனாறு மகாவித்தியாலயம்), எஸ்.சுமதி (நாகேந்திரா வித்தியாலயம்), ஜி.மஞ்சுளா (பிரமந்தனாறு மகாவித்தியாலயம்), கே.சந்திரகுமார் (சோழியன்தீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), எஸ்.சியாமளா (நாகபடுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஏ.வினூபா (கிராஞ்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), கே.உதயவிஜயகுமாரி (உருத்திரபுரம் மகாவித்தியாலயம்), எம்.யூடி (இராமநாதபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), தி.வத்சலா (நாகபடுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), லூனி.துஷாரா (ஜெயபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.ஸ்ரீரஞ்சனி (சின்னாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.துலாஞ்சலி (அக்கராயன் மகாவித்தியாலயம்), ஆர்.ஜீவப்பிரியா (சென். திரேசா பெண்கள் கல்லூரி), எஸ்.சிவனேஸ்வரி (பரந்தன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஆர்.ரகுநாதன் (அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), வி.அருள்மலர் (அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.புஸ்பமலர் (அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.மரின் (அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), பி.அன்பழகி (வவுனிக்குளம் மகாவித்தியாலயம்), என்.ஜெயலட்சுமி (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), எம்.மனோகர் (கனகபுரம் மகாவித்தியாலயம்), ஆர்.கீதா (கனகபுரம் மகாவித்தியாலயம்), ஏ.கே. ஆரோக்கியராஜா (சிவபாதக் கலையகம் வித்தியாலயம்), எஸ்.ஜே.றினோல்டா (வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்), ரி.இராஜேஸ்வரி (வேரவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), பி.சி.ரூபராணி (வேரவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.தேவரஞ்சினி (கிராஞ்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எம்.மாலினி (பூநகரி மகா வித்தியாலயம்), ஏ.சிவகுமாரி (வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம்).

பி.பரமேஸ்வரி (குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம்), கே.தமயந்தி (முரசுமோட்டை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ். ஹேமமாலினி (கறுக்காய்தீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), அருட்சகோதரி ஏ.எஸ்.ஸ்ரனிஸ்லஸ் (பத்திமா றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை), எம். யசோதா (முழங்காவில் மகாவித்தியாலயம்), மேரி.லூர்துநாயகி (புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), ஏ.வைதேகி (இரணைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை), எஸ்.வசந்தமலர் (கன்னங்கிராய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), பி.சுகந்தன் (இராமநாதபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.ஜெயதேவன் (மயில்வாகனபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.கல்பனா (வலைப்பாடு றோமன் கத்தோலிக்க பாடசாலை), அருட்சகோதரி சீமன் செல்வி (பல்லவராயன்கட்டு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை).

எம்.மேரி மேசிடஸ் (கறுக்காய்தீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.சுபாசினி (பிரமந்தனாறு மகாவித்தியாலயம்), வை.தர்சினி (வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), என். பத்மநாதன் (தர்மபுரம் மகா வித்தியாலயம்), எஸ்.வாகினி (கட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ஆர்.புஸ்பலதா (திருவையாறு மகாவித்தியாலயம்), எஸ். கணேசராஜா (முழங்காவில் மகாவித்தியாலயம்), வி.வசந்தகுமாரி (ஆனையிறவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை).


**சிறு விளம்பரம்**

**மணமகன் தேவை**

யாழ்.இந்து உயர்குல 5'4" உயரம் உள்ள 1965 இல் பிறந்த, செவ்வாய் குற்றம் அற்ற ஆசிரியைக்கு பண்பான மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல.13, மே/பா நமது ஈழநாடு, 267. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (379)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந், பிரகாஷ்ராஜ், சௌந்தர்யா நடித்த

**சொக்கத் தங்கம்**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே) (சி-974)

BEHIND ENEMY LINE

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்



**பாறை**

10.30, 2.30, 6.30, 9.30

**றோணியோ, கணனி சார் வேலைகள்**

வெளியீட்டாளர்கள், கல்வி நிறுவனங்கள், திணைக்களங்கள், பாடசாலைகளுக்கு

உயர் தரம் குறைந்த கட்டணம் துரித சேவை

ஆய்வுக்கட்டுரை கணனியில் எழுத்துருவாக்கி லேசர் பதிப்பு செய்துதரப்படும்

**சுந்தர் வெளியீடு**

844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [கோயில் வீதிச்சந்திக்கருகாமை]

தில்லையம்பதியாள் துணை

**கோண்டாவில் தில்லையம்பதி**
**அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்**
**பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2003**



நிகழும் சுபானு வருடம் ஆனித் திங்கள் 5 ஆம் நாள் (19.06.2003) வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் 8.40 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற தில்லையம்பதியாளின் திருவருள் கூடியுள்ளது.

"தில்லையம்பதியாளே சிவகாமிசுந்தரியே சரணம்"

தில்லையம்பதி 18.06.2003 (சி-1093) இங்ஙனம் திருக்கோயில் பரிபாலனசபை

# சமாதான முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டாலும் சிறுவர் புனர்வாழ்வுத் திட்டத்தில் புலிகள் தீவிரம்

## யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி பாராட்டு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் பின்னடைவுகள் ஏற்பட்டாலும், தமது படையணிகளில் இணைந்துள்ள சிறுவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை முன்னெடுப்பதில், விடுதலைப் புலிகள் தீவிர ஆர்வம் காட்டி வருவதாக, இலங்கைக்கான யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர், கொழும்பில் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடனான சமாதான முயற்சிகளில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள போதும், புலிகள் சிறுவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் இந்தச் செயற்திட்டத்தில் புலிகளின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்துவருவதுடன்- சிறப்பானதாகவும் அமைந்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கான செயற்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சமாதான முயற்சிகள் தடைப்பட்டாலும்கூட - இந்தச் செயற்திட்டம் தொடரவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும், யுனிசெப்பும் இணக்கம் கண்டுள்ளன.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் புலிகள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். இதற்காக, சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாம்களை அமைத்து, புனர்வாழ்வு நடவடிக்கைகளை அவர்கள் வேகமாகச் செயற்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், சிறுவர்களைப் படையில் சேர்ப்பதான குற்றச்சாட்டுக்களும் இப்போது வெகுவாகக் குறைந்துள்ளன.

ஜனவரி மாதத்தில் மட்டும் இத்தகைய 104 முறைப்பாடுகள் கிடைத்தன. ஆனால், மேமாதத்தில் 16 முறைப்பாடுகள் மட்டுமே கிடைத்துள்ளன என்று யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

## பிரதமர் ரணில் லண்டன் செல்கிறார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டமைச்சர் ரிரோன் பெர்னான்டோ ஆகியோர், ஒருவார கால உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு, எதிர்வரும் 20 ஆம் திகதி லண்டன் செல்லவுள்ளனர்.

எதிர்வரும் 23 ஆம் திகதி, பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளெயருடனான சந்திப்பொன்றையும் பிரதமர் ரணில். வீக்கிரமசிங்க நடத்தவுள்ளார்.

## பஸ்ஸில் திருடியவர் அகப்பட்டார்

முகமாலையிலிருந்து, யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்றில் பயணம் செய்த பயணி ஒருவரிடமிருந்து - ஆயிரம் ரூபாவைக் களவாடியவர், கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, அருகிலிருந்த பொலிஸ் சோதனைச் சாவடியில் பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 5 மணியளவில் இடம்பெற்றது. (121)

# விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு; அரசு தகவல்களை மூடிமறைக்கிறது!

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் ஆயுதக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான பல்வேறு விடயங்களை - அரசாங்கம் மூடிமறைப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் மீது இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.




கிழக்குக் கடலில் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது புலிகளின் ஆயுதக் கப்பலாகும். ஆனால், இது குறித்த உண்மையான விபரங்களை வெளியிட அரசாங்கம் தவறியுள்ளது.

மூழ்கடிக்கப்பட்ட கப்பல் தொடர்பான தகவல்களை மூடிமறைத்து வருகிறது.

புலிகளின் ஆயுதக் கடத்தல் நடவடிக்கைகளைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மூடிமறைத்து, அவர்களைக் காப்பாற்ற முனைகிறார்.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு சூழ்நிலையிலும் - நாட்டைப் பாதுகாப்பதற்கான அதிகாரங்களைப் பயன்படுத்த உறுதிபூண்டுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இந்தியாவுக்கு விஜயம் செய்த அமைச்சர் பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த்சின்ஹாவைச் சந்தித்தபோது எடுத்த படம்.

# ஈ.பி.டி.பி., வரதரணி முக்கியஸ்தர் பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவு !

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

ஈ.பி.டி.பி. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களில், மேற்படி கட்சிகளின் முக்கியஸ்தர்கள் சிலர் கொல்லப்பட்டனர். மேலும் சிலர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்களையடுத்தே ஈ.பி.டி.பி. மற்றும் வரதர் அணி முக்கியஸ்தர்களின் பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதெனப் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# பொ.ஐ.மு. மேல்மாகாணசபை உறுப்பினர் கந்தானையிலுள்ள வீட்டில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த - மேல்மாகாணசபை உறுப்பினர் ஒருவர், கந்தானையிலுள்ள அவரது வீட்டில் வைத்து - நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

மேல்மாகாணசபையில், பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் உறுப்பினராகவுள்ள சுனில் மெண்டிஸின் வீட்டுக்கு, வெள்ளைவான் ஒன்றில் வந்திறங்கிய, இனந்தெரியாத நபர்கள் சிலரே இத்தாக்குலை நடத்தினர்.

சுனில் மெண்டிஸுக்கு மீன்பார்சல் ஒன்றைக் கொடுக்கப்போவதாகக் கூறி, வீட்டுக்குள் நுழைந்த கொலையாளிகள், அவர்மீது சரமாரியாகச் சுட்டதாக, பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சுனில் மெண்டிஸ், அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அவரது உடலில் 10 இற்கும் மேற்பட்ட சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாகவும், இந்தக் கொலைக்கு - 9 மில்லி மீற்றர் பிஸ்ரல் பயன்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் மா அதிபர் ஏ.ஈ. ஆனந்தராஜா தெரிவித்தார்.

பொ.ஐ.மு. மாகாணசபை உறுப்பினர் சுனில் மெண்டிஸைச் சுட்டுக் கொன்ற கொலையாளிகள் - தாம் வந்த வெள்ளைவானிலேயே தப்பிச்சென்றுள்ளனர். கொலையாளிகளைத் தேடிப் பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.

சுனில் மெண்டிஸ் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, உடனடியாகக் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க, பொலிஸ் அத்தியட்சகர் பிறேமசிறி விதானகே மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த ஜெயக்கொடி ஆகியோர் தலைமையிலான விசேட பொலிஸ் குழுவொன்றையும் பொலிஸ மா அதிபர் அமைத்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னரே பொதுஜன ஐக்கிய முன்னணியின் தென்மாகாண சபை உறுப்பினர் 'சண்டி மல்லி' கொழும்பு யோர்க வீதியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தெஹிவளைப் பகுதியில்

# சயனைட் அருந்திய இளைஞருடன் தொடர்புடையதாக நால்வர் கைது

(கொழும்பு)

தெஹிவளைப் பாலத்தில் - பொலிஸார் மறித்துச் சோதனையிட முனைந்தபோது, சயனைட் அருந்தித் தற்கொலை செய்துகொள்ள முயன்ற, இளைஞருடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும், நான்கு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் பெண்கள் எனவும், இவர்கள் தங்கியிருந்த வீடு பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

சயனைட் அருந்திய இளைஞருடன் பயணம் செய்த இன்னொரு இளைஞரும், ஓட்டோ சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விவகாரத்தில் இந்தியத் தலையீடு; எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்கலாம்!

## 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது

(புதுடெல்கி)

விடுதலைப்புலிகளின் கப்பல் அழிக்கப்பட்ட சம்பவமும், இந்தியத் தரப்புக்கு ஆதரவான தமிழ்க்குழுவொன்றின் தலைவர் - யாழ். நகரில் வைத்துக் கொல்லப்பட்டதும் -

இலங்கை விவகாரத்தில் இந்தியத்தரப்பினது தலையீடு எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்கலாம் என - பிரபல இந்திய நாளிதழான 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' கருத்து வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பாக 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' செய்தியாளர் பி.கே. பாலச்சந்திரன் மேலும் தெரிவிக்கும்போது -

கடந்த சனியன்று இலங்கையில் இடம்பெற்ற - விடுதலைப்புலிகளின் எண்ணெய்க் கப்பலான எம்.ரி. சோஷின் தாக்கப்பட்டதும், இந்தியாவுக்கு ஆதரவான தமிழ்க் குழுவொன்றின் தலைவரான சுபத்திரன் யாழ்ப்பாணத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டதுமான இரண்டு சம்பவங்களும் - இந்தியாவின் தலையீடு அதிகரிப்பதற்கான வாய்ப்பை வழங்கலாம்.

புலிகளின் கப்பல் மூழ்கடிப்புச் சம்பவத்தில் இந்தியாவின் உதவி பற்றி, இந்திய அதிகாரிகள் மறுத்தாலும்- இலங்கையிலுள்ள அரசியல் ஆய்வாளர்கள் - இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியத் தலையீடு எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

சுபத்திரனின் கொலைச்சம்பவம் புதுடெல்கியில் ஆழ்ந்த கவனத்தைப் பெற்றிருக்கிறது. இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்தபோது - அப்படையோடு இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் சுபத்திரன் முக்கிய தலைவராக இருந்தார்.

பின்னர் - அந்த அமைப்பு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானதாகவும், எதிரானதாகவும் பிரிந்தபோது - வரதராஜப்பெருமாள் தலைமையிலான குழுவில், சுபத்திரன் சேர்ந்துகொண்டார். வரதராஜப்பெருமாள் 1990 ஆம் ஆண்டுமுதல் இந்தியாவில் வாழத் தொடங்கிய பின் - அந்த அணியை சுபத்திரனே இலங்கையில் வழிநடத்திவந்தார்.

இலங்கையின் இராணுவப்பலத்தின் அதிகரிப்பும், மீண்டும் போர் மூழக்கூடிய சூழலும் இந்தியாவிற்கு, இலங்கையில் கவனஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவும் - 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

# தமிழக விடுதலை இயக்கத்தின் 12 உறுப்பினர்கள் கைதாம்!

## தமிழகப் பொலிஸ் அறிவிப்பு

கடந்த வாரம் தமிழக அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட, தமிழக விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த 12 பேரைக் கைது செய்திருப்பதாக தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று தமிழகத்துக்கு இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் வரும்போது - பல்வேறு இடங்களிலும் குண்டுகளை வெடிக்கவைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்த இவர்கள் திட்டமிட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் இருந்து - குண்டுகள் பலவற்றைத் தாம் மீட்டுள்ளதாகவும் தமிழகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# புலிகளைப் போருக்குள் தள்ள அரசாங்கமும் படைகளும் சூழ்ச்சி!

## கப்பல் அழிப்பு, சுழிபுரம் சம்பவங்களுக்கு பல்கலை மாணவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்திற்கான விருப்பத்தோடு போரைக் கைவிட்டுள்ள புலிகளை, மீண்டும் போருக்குள் தள்ளும் அரசினதும், படைகளினதும் சூழ்ச்சியாகவே, அண்மைக்காலச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு -

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களைச் சிறிலங்கா அரசு - தமிழர்களுக்கு எதிரான பொறியாகவே கருதுகின்றது என்பது தெளிவாகிவிட்டது. இயல்பு வாழ்வு, அரசியல் உரிமைகள் என்பவற்றில் தனக்குள்ள கடப்பாடுகளை உதாசீனம் செய்துவந்த அரசு, இப்போது ஒருபடி மேலேபோய், அழித்தொழிக்கும் வேலைகளையும் தீவிரமாக ஆரம்பித்திருக்கின்றது.

இதனையே - சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் எண்ணெய்க்கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமையும், சுழிபுரத்தில் மக்கள் தாக்கப்பட்டமையும் காட்டுகின்றன. இந்த இரு சம்பவங்களும் படையினரால் சமாதானத்திற்கான காலத்தில் நிகழ்த்தப்படுவது இதுதான் முதற்தடவை அல்ல. முன்பும் இவ்வாறான சம்பவங்கள் நடந்தபோது - அதனை நியாயப்படுத்தியும், இனிமேல் அவ்வாறு நடக்காது என உறுதியளித்தும் வந்தது படைத்தரப்பு. ஆனால், திரும்பவும் அவ்வாறான சம்பவங்களே நடந்தேறுகின்றன.

14 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் எண்ணெய்க்கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டதுடன், மாலுமிகளான 12 விடுதலைப் புலிகள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இதனை - கடற்படை மறுத்துவரும் நிலையில்- நிலைமைகள் மோசமான கட்டத்தை அடைகின்றன. சமாதான முயற்சிகளில் முற்றுமுழுதாக நம்பிக்கையை இழக்கவைக்கின்றன.

அரச படைகள் வடக்கு - கிழக்கில் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக, சுழிபுரம் - வழக்கம்பரை அம்மன் கோயிலருகே, மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். அத்தோடு - வீதிச் சோதனைகளையும், அடையாள அட்டைப் பரிசோதனை களையும் கடுமையாகச் செய்துவருகின்றனர்.

இது ஒரு ஆபத்தான காலத்தைத் தமிழர்களுக்குத் திரும்பவும் கொண்டுவரும் நடவடிக்கையே ஆகும். சமாதானத்துக்கான விருப்போடு போரைக் கைவிட்டுள்ள புலிகளை, மீண்டும் போருக்குள் தள்ளும் சூழ்ச்சியாகவே - அரசினதும், படைகளினதும் இந்த நடவடிக்கைகள் உள்ளன.

உடனடியாக இத்தகைய அச்சுறுத்தல்களைப் படையினர் நிறுத்தி, சமாதானத்துக்கான சூழலை உறுதிப்படுத்தவேண்டும். கடலில் கைது செய்த மாலுமிகளான 12 விடுதலைப் புலிகளையும் உடன்விடுவிக்கவேண்டும். இல்லாத பட்சத்தில், அமைதிக்கு மிகப்பெரும் பங்கம் ஏற்பட்டு, போரில்லாத வழியில் தீர்வு காணும் முயற்சி இப்போதைக்கு இல்லையென்றாகிவிடும் என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாதர் கிராம அபிவிருத்திச்சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் - நாளை பி.ப. 4 மணிக்கு கட்டைப்பிராய், கலைமணி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களையும், நியாப் திட்டத்தினை மேற்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, மேற்படி சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (121)

### பாடசாலைகளுக்கு தளபாடங்கள்

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கு, தளபாடங்கள் நிகொட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்காக - ஒரு தொகுதி தளபாடங்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளன.

இந்தத் தளபாடங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், நிகொட் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன.

மக்கள் மீளக்குடியமர்ந்தபின், இயங்கும் எட்டுப் பாடசாலைகளுக்கே இத்தளபாடங்கள் - வழங்கப்படவுள்ளன. (17)

### சமயபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இவ்வருட இரண்டாம் தவணைக்கான செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் செயலமர்வில் பங்குபற்றுவதை அதிபர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

### பருவ மாணவர்கள் நூல் வெளியீடு

(வடமராட்சி)

புலோலி க.நடனசபாபதி எழுதிய 'பருவ மாணவர்கள்' அறிமுக விழா, அண்மையில் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் திட்டமிடல் பணிப்பாளர் கே.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில்- பண்டிதர் க.சச்சிதானந்தம், மாவட்ட வைத்திய அதிகாரி என். கதிரவேற்பிள்ளை, என். சுந்தரமூர்த்தி ஆகியோர் நூலின் விமர்சன உரையை நிகழ்த்தினர்.

## இவ்வாண்டு தேர்தல் இடாப்பில் புதிய பதிவுகளைச் செய்யலாம்!

### விண்ணப்பங்கள் விரைவில் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டுக்கான தேர்தல் இடாப்பு திருத்தவேலைகள் யாவும் யாழ்.தேர்தல் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

2002 ஆம் ஆண்டுக்கான இடாப்பு திருத்தவேலைகள் தற்போது முடிவடைந்த நிலையிலேயே, 2003 ஆம் ஆண்டுக்கான இடாப்பு திருத்தப்பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

2003 ஆம் ஆண்டுக்குரிய இடாப்பில், பதினெட்டு வயதிற்கு மேற்பட்டோர் புதிதாகத் தமது பெயர்களையும் பதிவு செய்யவிரும்பின் - தமது கிராம அலுவலரிடம் இதற்குரிய விண்ணப்பப் படிவத்தினைப்பெற்று, பதிவினை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் மிகவிரைவில் கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாக - யாழ். தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரா,சு)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் :ஜெ.தமிழ்ப்பிரியா

முகவரி : ஊரணி, வல்வெட்டித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------

முகவரி :-----------------------------

பிறந்த ஆண்டு:-----------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------

பெற்றார் ஒப்ப...


# நக்கீரன் கோபால் மீது 'பொடா' வழக்கு தாக்கல் செய்ய உச்சநீதிமன்றம் தடை!

## மறுஅறிவித்தல் வரை நடைமுறையில்

'நக்கீரன்' வார இதழ் ஆசிரியர் கோபால் மீது 'பொடா' சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வதற்கு இந்திய உச்ச நீதிமன்றம் தற்காலிகத் தடையை விதித்துள்ளது.

சந்தனக் கடத்தல் வீரப்பனுடன் தொடர்புடையதான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, 'நக்கீரன்' கோபாலைத் தமிழக அரசு கைதுசெய்து, 'பொடா' சட்டத்தின்கீழ் சிறையில் தடுத்துவைத்துள்ளது.

இவர் மீது 'பொடா' சட்டத்தின் கீழ் கொலைவழக்கு ஒன்றைத் தாககல் செய்வதற்குத் தமிழகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர். தற்போது 'பொடா' சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படுவதை எதிர்த்து - நக்கீரன் கோபால் இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட இந்திய உச்ச நீதிமன்றம் - தமிழகப் பொலிஸார் நக்கீரன் கோபால் மீது, 'பொடா' சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தற்காலிகத் தடையை விதித்துள்ளது.

மறுஉத்தரவு வழங்கப்படும்வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பத்திரிகைத் தொழிலைச் செய்யவிடாமல் கட்டுப்படுத்துவதற்காக, நக்கீரன் கோபால் மீது கொலைக் குற்றஞ்சாட்ட தமிழக அரசு முனைவதாக உச்ச நீதிமன்றத்தில் கோபாலின் வழங்கறிஞர் வாதிட்டார்.

இதையடுத்தே, நக்கீரன் கோபால் மீது 'பொடா' சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல் செய்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், வழகைத் தொடர்ந்து விசாரிக்கவும் தீர்மானித்துள்ளது.

# வடமராட்சியில் கடத்தப்பட்டவரின் குடும்பத்தை படையினர் விசாரணை!

வடமராட்சிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சம்பவத்தையடுத்து - அவரது குடும்பத்தினர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு, தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன், கடத்தப்பட்ட குடும்பஸ்தரின் மகனும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்தவாரம் - திக்கம் மாணாண்டி பகுதியில் வைத்து, இன்பருட்டியைச் சேர்ந்த த.குலசிங்கம் என்பவர், காரில் குடும்பத்தவருடன் வந்துகொண்டிருந்தபோது - இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து - இவரது மனைவி குலசிங்கம் டெய்சி (வயது 40) என்பவரும், இரண்டு பிள்ளைகளின் தாயான இவரது மகள் உதயகுமார் ரேணுகா (வயது 22) மற்றும் மகன் குலசிங்கம் விஜயகுமார் (வயது 19), அயல் வீட்டாரான ப.பூலோகசிங்கம் (வயது 52) ஆகியோர் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இராணுவத்தினரால், அவர்களது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டு, சக்கோட்டை இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, படையினரால் தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் - மாலையிலேயே விடுவிக்கப்பட்டனர்.

படையினர், விசாரணை செய்த போது - கடத்தப்பட்டவரான குலசிங்கம் எங்கே? எனக்கேட்டு மகனான விஜயகுமாரைத் தாக்கியுள்ளனர்.

ஏனையவர்களையும், குலசிங்கம் பற்றிய தகவலைக் கேட்டே, படையினர் விசாரணை செய்ததாகத் தெரியவருகிறது. (09)

# சிறு செய்திகள்

### பெண்கள் கிரிக்கெட்; யாழ். அணிக்கு இரண்டாம் இடம்!

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்திய பெண்களுக்கான மாகாணமட்ட கிரிக்கெட் போட்டியில், யாழ்.மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

கடந்த 13 ஆம் திகதி வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில், யாழ். மாவட்ட அணியைத் தோற்கடித்து, மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் அணி முதலாம் இடத்தைப் பெற்று, வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டது.

### கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

கெருடாவில் தெற்கு, கோட்டை சீமா அருள்மிகு முத்துமாரியம்மாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று காலை 7 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த கும்பாபிஷேகம் சிவஸ்ரீ நா.ரங்கநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த ஆலயம் ஒருகோடி ரூபாவில் புனருத்தாரணம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (17)

### மட்டுவில் துர்க்காதேவி ஆலய கும்பாபிஷேகம்

சாவகச்சேரி நுணாவில்- விளைவேலி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் அடுத்தமாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ கி.சோமசுந்தரக்குருக்கள் நடாத்திவைப்பார். (24)

### நல்லூரில் சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் இடம்பெறும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் - நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை பி.ப. 5.30 மணிக்கு, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் மலர் சின்னையா - "வாழும் இந்து மதம்" என்ற விடயம் குறித்து உரையாற்றுவார்.

### மேசைப்பந்தாட்டத்தில் யாழ். அணிகளுக்கு வெற்றிக்கிண்ணம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களம் நடாத்திய மாகாணமட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில் - யாழ். மாவட்ட ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் முதலாம் இடங்களைப் பெற்று வெற்றிக்கிண்ணங்களைச் சுவீகரித்துக் கொண்டன.

கடந்த 14 ஆம் திகதி வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில்- யாழ். மாவட்ட ஆண்கள் அணி, மனனார் மாவட்ட அணியைத் தோற்கடித்தது. பெண்களுக்கான இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியை, யாழ்.மாவட்ட அணி தோற்கடித்தது.

### விதவைகளுக்கு ஆடு வளர்க்க உதவி

(வடமராட்சி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரின் அனுசரணையுடன், போக்கறுப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், 10 விதவைகளுக்கு - ஆடு வளர்ப்பதற்கு உரிய உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான நடடிவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்



## மாணவர் மலர்

(01) கீழே தரப்பட்டுள்ள படத்தைக் கூர்ந்து அவதானியுங்கள்.



மேலே தரப்பட்டுள்ள படம் தொடர்பாகக் கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கருத்துப் புலப்படக்கூடிய வாக்கியங்களைத் தெரிவு செய்து புள்ளிக்கோடுகளில் எழுதுக.

* சிறுவன் தூண்டில்மூலம் மீன் பிடிக்கின்றான்.
* சிறுவன் கயிற்றின்மூலம் மீன் பிடிப்பிக்கின்றான்.
* கடற்கரையில் தூண்டில்போட்டு மீன்பிடிக்கின்றான்.
* குளக்கரையில் அமர்ந்து தூண்டில்போட்டு மீன் பிடிக்கின்றான்.
* சிறுமி மீன் ஒன்றைப் பிடித்து வைத்திருக்கின்றாள்.
* சிறுமி மீனை நீருக்குள் மீண்டும்விடத் தயாராகின்றாள்.
* கூடைக்குள் நிறைய மீன்கள் உண்டு.

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

(02) கீழே தரப்பட்டுள்ள விளம்பரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

உடலைச் சுத்தமாக வைத்திருக்க
தினமும் ஒருவருக்கு
ஐம்பது லீற்றர் நீர் தேவை
உயிர் வாழ்வதற்கு
குறைந்த பட்சம் ஒரு லீற்றர் அவசியம்.
ஆனால்,
உலகில் எத்தனையோ பேருக்கு
இந்தளவு நீர்கூடக் கிடைப்பதில்லை.
நீர் அனைவருக்கும் பொதுவான
விலை மதிப்பற்ற மூலவளமாகும்.
நூறு கோடி மக்கள் குடிநீரின்றி
அவலம்
இருபத்து இரண்டு இலட்சம் பேர்
மரணம்!

நீரை வீண் விரயம் செய்வதைத் தவிர்ப்போம்.
நீர் வளத்தைப் பாதுகாப்போம்.

தகவல்
சுற்றாடல், இயற்கை வளங்கள்துறை அமைச்சு.

(1) தினமும் உடலைச் சுத்தமாக வைத்திருக்க எத்தனை லீற்றர் நீர் தேவை?

..........................................................................

(2) மனிதன் உயிர்வாழக் குறைந்தபட்சம் எத்தனை லீற்றர் நீர் தேவை?

..........................................................................

(3) உலகில் எத்தனை கோடி மக்கள் நீரின்றி அவலப்படுகின்றார்கள்?

..........................................................................

(4) பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

(அ) இலங்கையில் இருபத்து இரண்டு இலட்சம் பேர் நீரின்றி மரணமாகியுள்ளனர்.
(ஆ) இருபத்து இரண்டு இலட்சம் பேர் நீரின்றி வாடுகின்றனர்.
(இ) உலகில் இருபத்து இரண்டு இலட்சம் பேர் நீரின்றி மரணமாகியுள்ளனர்.
(ஈ) இருபத்து இரண்டு இலட்சம் பேருக்கு நீரே கிடைப்பதில்லை.

5) நாம் 'நீர்' தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டியவை?
1) ..........................................................................

2) ..........................................................................

6) மேலே தரப்பட்டுள்ள விளம்பரத்தை எந்த அமைச்சு வெளியிட்டுள்ளது?
..........................................................................

7) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலப் பெயர்களை எழுதுக?

1) நீர்.........................
2) மக்கள்.........................
3) ஐம்பது.........................
4) விலை.........................

8) நீர் தொடர்பான பாடத்தை ஆசிரியர் கற்பித்த பின், பின்வரும் கூற்றுக்களைக் கரும்பலகையில் எழுதி, சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்யுமாறு கூறினார். நீங்கள் சரியான கூற்றுக்களின் இலக்கங்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுங்கள்.

ஆசிரியர் எழுதிய கூற்றுக்கள்

1) விலங்குகள் உயிர் வாழ்வதற்கு நீர் தேவை.
2) தாவரங்கள் உயர்வாழ நீர் அவசியமல்ல.
3) நீரில் உப்பைக் கரைக்க முடியாது.
4) நீர் பாயும் தன்மையைக் கொண்டுள்ளது.
5) காடழிப்பதால் நீரூற்றுக்கள் வற்றிப்போகும்.
6) நீர் மாசடைவதால் நீர்த் தாவரங்களும், மீன் வளமும் அழியும்.
7) நீருடன் குளோரின் சேர்த்தால், நோய்க்கிருமிகள் அழியாது.
8) மாசடைந்த நீரினால் மண்வளம் குன்றாது.


சரியான கூற்றுக்களின் இலக்கங்கள்.

..........................................................................

(03) எஞ்சியிருக்கும் திரவக் கனவளவுகள் எவ்வளவு எனக் கண்டு, அட்டவணையைப் பூர்தகி செய்யுங்கள்.


| இருந்த திரவத்தின் கனவளவு | நீக்கப்பட்ட திரவத்தின் கனவளவு | எஞ்சியுள்ள திரவத்தின் கனவளவு |
|---|---|---|
| 6 l | 350 ml | |
| 7 l | 750 ml | |
| 8 l | 1 l 100 ml | |
| 6 l | 500 ml | |

(04) கீழே தரப்பட்டுள்ள வரிப்படத்தின் திசைகளைப் பெயரிடுங்கள்.




(1)......................... (2).........................
(3)......................... (4).........................
(5)......................... (6).........................
(7)......................... (8).........................

(05) கீழே தரப்பட்டுள்ள உருவைப் பார்த்து விடை தருக.



உருவில் உள்ள,

(1) செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
(2) செங்கோணமுள்ள முக்கோணிகள் எத்தனை?
(3) செங்கோணமற்ற முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(06) "பத்திரிகை வாசிப்பதனால்"... என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1)..........................................................................
2)..........................................................................
3)..........................................................................
4)..........................................................................
5)..........................................................................
6)..........................................................................

(தொடரும்....)

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

# க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை

# முன்மாதிரி வினாத்தாள் கணிதம்

01. பின்வருவனவற்றிக்கு இடைவெளியை நிரப்புக.
(அ) {4,6,8,13} - {6,13}

(ஆ) $x^2 + - - + 49$ இது நிறைவர்க்கமாக இருப்பின்
விடை (அ) ⊂(ஆ) 14

02. ஒரு புகையிரதம் ஒன்று 50 $kmh^{-1}$ என்னும் 150 km தூரத்தைக் கடந்து முடித்தது எனின், அது பிரயாணம் செய்த நேரம் யாது?

நேரம் = தூரம் / கதி
= 150 / 50
= 3h.

03. 48 cm பரிதி உடைய சில்லு ஒன்று 0.012 Km தூரம் செல்ல எத்தனை முறை சுற்றவேண்டும்?

1km = 1000 m
0.012km = 12m ஆகும். மேலும்,
1m = 100cm
48cm = 0.48 m
சுழலும் தடவை = 12 / 0.48
= 1200 / 48
= 25 தடவைகள்.

04: சுருக்குக:

1 2/3 ÷ (5/6 + 2 1/2)
5/3 ÷ (5/6 + 5/2)
5/3 ÷ (5 +15) / 6
5/3 ÷ 20/6
5/3 x 6/20 = 1/2

05. பின்வரும் சமன்பாட்டைத் தீர்க்குக.

2 - x/2 = 5x - 20
2 + 20 = 5x + x/2
+ 22 = (10x + x) / 2
11x = 44
x = 4

06. 1/v - 1/u = 1/t u ஐ எழுவாயாக மாற்றுக.
1/v - 1/t = 1/u
1/u = (t - v) / vt
u (t-v) = vt
u = v t / (t-v)

07. பண்டம் ஒன்று 3600 ரூபாவிற்கு விற்கப்படுவதால், 12 1/2% இலாபம் ஏற்படுகிறது. பண்டத்தின் கொள்விலை யாது?

பண்டத்தின் கொள்விலை = விற்றவிலை x 100 / இ/ந வீதம்
= 3600 x 100 / 112.50
= 3200/=

08. $Y = 5 - (6-x)^2$ என்ற வளையின்
(1) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?

$y = 5 - (36 - 12x + x^2)$
$= 5- 36 + 12x - x^2$
$= -31 + 12x - x^2$
சமச்சீர் அச்சின் சமன்பாடு
= -b/2a
= -12/12
= -1

(2) உச்சியின் ஆள்கூறு யாது?

உயர்வுப் பெறுமதி = $4ac - b^2/4a$
= $(4x -1x - 31 - 12^2) / (4x -1)$
= -5
உச்சியின் ஆள்கூறு = (-1, -5)

09. 8 ஈட்டுக்களின் இடை 56. ஒரு ஈட்டு சேர்க்கப்பட்டால் ஈட்டுக்களின் புதிய இடை 58 எனின், சேர்க்கப்பட்ட ஈட்டு யாது?

ஈட்டின் மொத்தம் = 56 x 8 = 448
புதிய ஈட்டின் இடை = 58 எனின்,
சேர்க்கப்பட்ட ஈட்டு = 74 ஆகும்.

10. முக்கோணி ஒருங்கிசையும் சந்தர்ப்பம் யாது?

1) ப.ப.ப. 3) ப.கோ.கோ.
2) ப.கோ.ப. 4) செ.ப.ப.

11. காரணி அறிவைப் பயன்படுத்திப் பெறுமானத்தைக் காண்க.


$\sqrt{42 \times 58 + 64} = \sqrt{(50-8)(50+8) + 8^2}$
$= \sqrt{50^2 - 8^2 + 8^2}$
$= 50.$

12. 12 பக்கம் கொண்ட பல்கோணியின்
(அ) அகக்கோணத்தின் மொத்தப் பெறுமதி யாது?
(n-2) 180
= (12 - 2) x 180
= 10 x 180
= 1800

(ஆ) பக்கங்களின் எண்ணிக்கையைக் கூட்டினாலோ அல்லது குறைத்தாலோ பெரிய கோணத்தைப் பெறமுடியும்?
குறைக்கும் போது.

13. $11011_{இரண்டு} + 10100_{இரண்டு}$ அடி பத்தில் தருக.
$11011_{இரண்டு}$
$10100_{இரண்டு}$
$101111_{இரண்டு}$
விடை $47_{பத்து}$

14.




x இன் பெறுமதி யாது?
$x = 30^\circ$

15. கோடாத சதுரமுகி தாயக்கட்டை ஒன்று உருட்டப்படுகிறது எனின், அதில் முக்கோண எண் விழுவதற்கான நிகழ்தகவு யாது?
நிகழ்தகவு = 2/6
முக்கோண எண் (1,3)

16. இயந்திரம் ஒன்றை வாடகைக் கொள்வனவுத் திட்டத்துக்கு அமைவாக 18 சமமாத தவணைக் கட்டணமாகச் செலுத்தி முடிக்கும் எனின், மாத அலகு யாது?
n (n + 1) / 2 = 18 x 19 / 2
= 171 மாத அலகாகும்.

(தொடரும்....)

சி.சிவசெந்தூரன்

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

## பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

(சென்றவாரத் தொடர்ச்சி...)

36 ஆம், 37 ஆம் வினாக்களில் ஒரு பிரச்சினையும் - A,B என்னும் இருகூற்றுக்களும் தரப்பட்டுள்ளன. உமது விடையைப் பின்வரும் தகவல்களுக்கு அமையத் தெரிவு செய்க.

- விடை காண்பதற்குக் கூற்று A மாத்திரம் போதுமானதெனின், விடை 1 ஐயும்
- விடை காண்பதற்குக் கூற்று B மாத்திரம் போதுமானதெனின், விடை 2 ஐயும்
- விடை காண்பதற்குக் கூற்றுக்கள் A,B ஆகிய இரண்டும் அவசியமெனின், விடை 3 ஐயும்
- விடை காண்பதற்குக் கூற்று A தனியாகவும் கூற்று B தனியாகவும் பயன்படுத்தக் கூடுமெனின், விடை A ஐயும்
- விடை காண்பதற்குக் கூற்றுக்கள் A இலும், B இலும் தரப்பட்டுள்ள தகவல்கள் போதியனவல்ல எனின், விடை 5 ஐயும் தெரிவு செய்க.


(36) பிரச்சினை - குமாரின் வயது என்ன?
கூற்று A - நாதன், ரவி, குமார் ஆகியோரின் வயதுகளில் மொத்தம் 48 ஆண்டுகளாகும்.
கூற்று B - குமாரின் வயது நாதனின் வயதைவிட 4 ஆண்டுகளும், ரவியின் வயதைவிட 2 ஆண்டுகளும் குறைவாகும்.

1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

(37) பிரச்சினை - நந்தன், ரமணன் ஆகியோரிடையே எவர் உயரமானவர்.
கூற்று A - நந்தன், முகுந்தனைவிட உயரமானவர். ஞானத்தைவிடக் குட்டையானவர்.
கூற்று B - ரமணன், முகுந்தனைவிட உயரமானவர். ஆனால், ஞானத்தைவிடக் குட்டையானவர்.

1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

38 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் வரைபு வகைக் குறிப்பை அடிப்படையாகக் கொண்டவை.




தோதல் ஒன்றின்போது - மாவட்டம் ஒன்றிலே போட்டியிட்ட மூன்று வேட்பாளர்களுக்குக் கிடைத்த வாக்குகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. இம்மாவட்டம் A,B,C,D என்னும் நான்கு ஆசனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
ஆசனம் ஒவ்வொன்றிலும் அளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கை வருமாறு -
A - 7,000, B - 5,500, C - 6,500, D - 8,320.
ஒவ்வொரு வினாவுக்குமான திருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(38) எந்த ஆசனத்திலே வேட்பாளர் X இற்கு அதிக எண்ணிக்கையான வாக்குகள் அளிக்கப்பட்டன?
1) A 2) B 3) C 4) D

(39) ஆசனங்கள் எல்லாவற்றிலிருந்தும் Z இற்குக் கிடைத்த வாக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 7,165 2) 8,245 3) 7,235 4) 6,355


(40) எந்த ஆசனத்திலே அதன் 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகள் ஒரு தனி வேட்பாளருக்கு அளிக்கப்பட்டன?
1) A 2) B 3) C 4) D

கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்றோடு சரியொப்பமாயிருக்கும் கூற்றைத் தெரிவு செய்க.

(41) சில பிள்ளைகள் இனிமையாகப் பாடுவர். இனிமையாகப் பாடும் பிள்ளைகளில் சிலர் நன்றாக ஆடுவர். நன்றாக ஆடவல்ல ஒவ்வொரு பெண்பிள்ளையும் மிகவும் அழகுடையவர். அவ்வாறாயின்,
1) சில பிள்ளைகள் ஆடலில் கெட்டிக்காரராயினும், அழகுடையவரல்லர்.
2) மிக்க அழகுடைய பிள்ளைகள் நன்றாக ஆடுவர்.
3) ஒவ்வொரு பிள்ளையும் நன்றாக ஆடவும், பாடவும் அல்லது.
4) மிக்க அழகுடைய பிள்ளைகள் இனிமையாகப் பாடுவர்.

(42) I.Q FOR ALL என்ற நூலின் முதல் 1000 பிரதிகளை அச்சடிப்பதற்கான சராசரிச் செலவு Y ரூபாவாகும். மேலதிகமான ஒவ்வொரு 1000 பிரதிகளையும் அச்சடிப்பதற்கான சராசரிச் செலவு Y/10 ஆகும். 10,000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டிருப்பின், சராசரிச் செலவு எவ்வளவாக இருக்கும்?
1) 0.019Y 2) 0.02Y 3) 0.05Y 4) 0.19Y

43 ஆம், 44 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றும் இங்குள்ள வரைபை அடிப்படையாகக் கொண்டவை. இவ்வரைபு A - F எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள க. பொ. த. (உயர்தர) மாணவர் 6 பேர் இரண்டு வருடங்களில் ரியூசன் வகுப்புக்களுக்காக (Tution) ஒதுக்கிய மணித்தியாலங்களின் அளவையும், அக்காலத்தினுள் அவர்களின் நூற்கல்வி வினையாற்றுகை மேம்பாட்டையும் காட்டுகிறது.




ரியூசனுக்காகச் செலவழித்த நேரம் 100 மணி அலகுகளில்


(43) மாணவன் E உம், மாணவன் F உம் தமது வினையாற்றுகையில் 100% மேம்பாட்டினைக் காட்டத் தொடங்குவதற்கு முன்னர், ஒவ்வொருவரும் ரியூசனுக்காகச் (Tution) செலவழித்த மணித்தியாலங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

1) 500 2) 600 3) 700 4) 800 5) 900

(44) மாணவன் A உம், C உம் ஒரேயளவு எண்ணிக்கையான மணித்தியாலங்களை ரியூசனுக்காகச் செலவழித்தபோது, அவர்களின் நூற்கல்வி வினையாற்றுகையின் உச்ச நூற்றுவீத வேறுபாடு யாது?

1) 5 2) 10 3) 15 4) 20 5) 25

(45) இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரியிலுள்ள A - K வரை பெயரிட்டுள்ள 11 துண்டுகளும் வெவ்வேறுபட்ட ஆட்களினால் வர்ணம் பூசப்படவுள்ளன. ஒன்றையொன்று தொடும் துண்டுகளுக்கு ஒரே நேரத்தில் வர்ணம்பூசமுடியாது. ஒன்றுக்கொன்று தொடுதலற்ற துண்டுகளுக்கு ஒரே நேரத்தில் வர்ணம் பூசமுடியும். இந்த மாதிரிக்கு வர்ணம் தீட்டுவதற்கு எடுக்கக்கூடிய ஆகக்குறைந்தளவு நேரம் யாது? (வர்ணம் உலர்வதற்கு எடுக்கும் நேரத்தைக் கவனத்தில் கொள்க).




1) 17 2) 23 3) 29 4) 35 5) 41

(தொடரும்...)

P.உமாசங்கர்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
வேலோடு நின்றான் இடு என்றது போதும்
கோலோடு நின்றான் இரவு.
- திருக்குறள்.

## நமது நோக்கு

### தரையிலும் சீண்டும் முயற்சி!

யாழ்.குடாநாட்டில், போராளிகள் மீதான படையினரின் சோதனைகளும், அரசியற்துறை அலுவலகங்கள் மீதான திடீர் சுற்றிவளைப்புக்களும் அதிகரித்துச் செல்வதானது - அநாவசியமான பதற்றத்தையும், அச்சுறுத்தலையும் ஏற்படுத்துவதாக அமைந்துவருகின்றன.

குறிப்பாக - சுழிபுரம் பகுதியில், கடந்த ஓரிரு தினங்களாக நடைபெற்றுவந்த சம்பவங்கள் - இராணுவத்தினர், சோதனையையும் சுற்றிவளைப்பையும் - வேண்டுமென்றும், தமது அடாவடித்தனங்களுக்கு வடிகாலாகவும் பயன்படுத்த முனைவதை எடுத்துக்காட்டுகின்றன.

சுழிபுரம் - வழக்கம்பரையில், போராளி ஒருவரை மறித்த படையினர் - அவரது அடையாள அட்டையைப் பறித்ததோடு, அவரது பையையும் சோதனையிட முயன்றுள்ளனர்.

எந்தவித முகாந்திரமும் இல்லாது - படையினர், போராளியைச் சோதனையிடுவதை, பொதுமக்களும் அனுமதிக்காத நிலையில் - தாம் நினைத்ததைச் சாதிக்கவேண்டுமென்ற அழுங்குப் பிடிவாதத்துடன் அங்கு படையினர் நடந்துகொண்டிருக்கின்றனர்.

நிராயுதபாணியாக நின்றிருந்த போராளியையும், அவருக்கு ஆதரவாகக் கூடிய ஆயிரக்கணக்கான மக்களையும் அச்சுறுத்த - துப்பாக்கிப்பிரயோகம் செய்ததுடன், மிருகத்தனமாக மக்களைத் தாக்கியுமிருக்கின்றனர் இராணுவத்தினர்.

இறுதியில், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் முன்னிலையில், பொலிஸார் - குறிப்பிட்ட போராளியைச் சோதனையிட்டபோது - அவரிடம் சந்தேகத்திற்குரியவை எதுவுமே இல்லையென்பது தெளிவானது.

இதையடுத்து, சம்பவம் நடந்ததற்கு மறுதினம் - நூற்றுக்கணக்கான இராணுவத்தினர், அதிகாலை முதலே, சுழிபுரம் பகுதியில் திரண்டு, பெரும் சுற்றிவளைப்பொன்றை நடத்தி - விடுதலைப் புலிகளின் அலுவலகமொன்றைப் பலவந்தமாகச் சோதனையிடவும் முயன்றிருக்கின்றனர்.

பழைய பாணியில், படைநடவடிக்கையொன்றை ஒத்ததாக மேற்கொள்ளப்பட்ட இச்சுற்றிவளைப்பில் - அப்பகுதியிலுள்ளோரைப் பயமுறுத்துவதற்காகத் துப்பாக்கிப்பிரயோகமும் நடத்தப்பட்டிருக்கிறது.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் - நிலவிவரும் அமைதிச் சூழலை மீறி, இராணுவ வலையமைப்புக்குள் குடாநாடு இருப்பதை எடுத்துக்காட்டுவதற்கான வலிந்த முயற்சியாகவும், போராளிகளை ஆத்திரமூட்டவும், பொதுமக்களை பதற்றமடையச் செய்யவும், பயமுறுத்தவுமான நோக்கத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதனையே, நேற்றுமுன்தினம் கிழக்கில் மட்டக்களப்பில் நடந்த படையினருடனான சந்திப்பில், மட்டு - அம்பாறை மாவட்டங்களுக்கான விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஷும் - அங்கு வந்திருந்த இராணுவத் தளபதிகளிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

படையினர் - தாம் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டிய தேவை இருப்பதாகக்கூறி - சோதனைகளையும், கெடுபிடிகளையும் நியாயப்படுத்த முயன்றபோது -

அதற்குப் பதிலளித்த தளபதி ரமேஷ் - இத்தகைய நடவடிக்கைகள், மக்கள் மத்தியில் பதற்றத்தையே ஏற்படுத்தியுள்ளதாகவும் - இவை மக்களிடையே எதிர்ப்புணர்வைத்தான் மேலோங்கச் செய்யுமெனவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இதனையொத்த கருத்தையே, குடாநாட்டுச் சூழலிலும் எடுத்துக்காட்டவேண்டியிருக்கிறது.

போர்நிறுத்தம் அமுலானதன் பின்னர் - கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் சோதனைச்சாவடிகளை அகற்றியும், பாதுகாப்பைத் தளர்த்தியும் சிங்கள மக்களை - யுத்தத்தின் நினைவுகளிலிருந்து விலக்கிவைக்க விரும்பிய அரசாங்கம்,

தமிழர் பகுதிகளில் அதற்கு நேர்மாறான நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுவதைத் தொடர்ந்தும் அனுமதித்துவருவதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்படாததுடன் - விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் அரசாங்கம் இணங்கிக்கொண்டதன்படியாக - மக்கள் குடியிருப்புக்களை ஆக்கிரமித்து நிற்கும்போக்கிலும் கிஞ்சித்தும் தளர்வு ஏற்படவில்லை.

உயர்பாதுகாப்பு வலயங்கள் அப்படியேயிருக்க, அவற்றிற்கு வெளியேயும் - முன்னர் இருந்த முகாம்கள், காவலரண்களை ஒப்புக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக அகற்றிவிட்டு - பதிலாக புதிய முகாம்களையும், காவலரண்களையும் அமைப்பதில்தான் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை -பொதுமக்கள், போராளிகள் மீதான கெடுபிடிகளும் - போராளிகளின் அலுவலகங்களை அடாத்தாகச் சோதனையிடுவதும் இப்போது சரமாரிக்கு அதிகரித்திருக்கின்றன.

இவையெல்லாம் - யுத்தச் சூழலுக்குள் தமிழ்மக்களை இன்னமும் அழுத்திவைப்பதான முயற்சி என்பதோடு - போர்நிறுத்தத்தை அப்பட்டமாக மீறுவதுமாகவே அமைகின்றன.

படைத்தரப்பின் இப்போக்கு - விடுதலைப் புலிகளைச் சீண்டி, அவர்களைப் பொறுமையின் எல்லைதாண்ட வைக்கும் இலக்கை நோக்கிய நகர்வுகள்தானா என்ற சந்தேகமும் இப்போது வலுத்துவருகின்றது.

ஏற்கனவே - கடலில் தமது அடாவடித்தனங்களூடாக அப்பிராந்தியத்தை நெருக்கடிக்குள்ளாக்கியிருப்பதோடு - வலிந்து ஆத்திரமூட்டல்களைக் கடற்படை மேற்கொள்ள - தரையிலும் இவ்வாறானதொரு நிலைக்கு இராணுவமும் சென்றுகொண்டிருப்பதையே அண்மைய சம்பவங்கள் உறுதிப்படுத்துபவையாக இருக்கின்றன.

# கடலில் நடக்கும் அநியாயங்களுக்கு கடற்படையினரே முழுப் பொறுப்பு!

## கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் சாடல்

(யாழ்ப்பாணம்)

சமாதான உடன்படிக்கைக்குப் பின்னர் - கடலில் நடைபெற்ற பல அநியாயச் சம்பவங்களுக்கு, சிறிலங்கா கடற்படையே காரணமாக இருந்துள்ளது என்று, வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பலைக் கடற்படை தாக்கி அளித்துள்ளமையையும், அதிலிருந்த பன்னிரெண்டு போராளிகளைக் கடற்படையினர் கைது செய்தமையையும் கண்டித்து, வட மாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமாதான உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் - கடலில் பல அநியாயச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில், முக்கியமான காரணர்களாக கடற்படையினர் இருந்துள்ளனர். சில சம்பவங்களில், கடற்தொழிலாளர்களும், அவர்களது பெறுமதிமிக்க உடைமைகளும் அழிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுகளில் - மத்தியஸ்தர்களான போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பங்களிப்பும், செயற்பாடுகளும் எந்தளவுக்கு உறுதியும், நேர்மையுமானதென்பதையிட்டுப் பொதுமக்கள் சந்தேகம் கொள்ளவேண்டியுள்ளது.

சந்தேகத்துக்கிடமான முறையில் கடலில் நடமாடும் கலங்களைப் பரிசோதனை செய்யும் வேளைகளில், கண்காணிப்புக் குழுவினரும் உடனிருத்தல் வேண்டும் என்பது புரிந்துணர்வு ஒப்பந்த விதியாகும். இருந்தும், கடற்படையினர் தன்னிச்சையாகச் செயற்பட்டுக் கலங்களைச் சுடுவதும், மூழ்கடிப்பதும், அதிலுள்ளவர்களைத் தாக்குவதும் அப்பட்டமான ஒப்பந்த மீறல் செயற்பாடாகும்.

இதன்காரணமாக - கடலில் தொழில் செய்கின்ற கடற்தொழிலாளர்களும், ஒழுங்காகத் தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ளார்கள்.

நிலையான, உறுதிமிக்க சமாதானத்தை எதிர்நோக்கியிருக்கும் எந்தப் பொதுமகனும் - சமாதானத்தைக் குழப்பும் இப்படியான சம்பவங்களை வரவேற்கமாட்டான். இனிமேலாவது இப்படியான நிகழ்வுகள் தொடராமல் இருக்கவும், கைது செய்யப்பட்ட 12 கப்பல் மாலுமிகளின் பாதுகாப்பிற்கும், கணகாணிப்புக் குழுவினர் பொறுப்பாக இருந்து செயற்பட வேண்டுமென வேண்டுகின்றோம்.

- என்று அந்தக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



உள்ளூராட்சி வாரத்தையொட்டி, சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (29)

# வட-கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்; முக்கிய முடிவு இன்று வெளியாகும்!

## சட்டத்திருத்தம் நாடாளுமன்ற விவாதத்தில்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு, எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுமா என்பது பற்றிய இறுதி முடிவு, இன்று பெரும்பாலும் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஒத்திப்போடுவதற்கும், புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்கும் தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரங்களை வழங்கும், உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம், இன்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்தச் சட்டமூலம், விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு - நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், எதிர்வரும் 25 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் ரத்துச் செய்யப்படும் எனத் தெரியவருகிறது.

இதேவேளை - இந்தத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்குத் தடைவிதிக்கக் கோரி, மனித உரிமைகள் அபிவிருத்திக்கான சட்டத்தரணிகள் சங்கம் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது.

இந்த மனு மீதான விசாரணைகள் முடிவுற்று - இதன் தீர்ப்பு ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தத் திருத்தச் சட்டமூலத்தை விவாதிப்பதற்கு உயர் நீதிமன்றம் தடை விதித்தால், நாடாளுமன்ற விவாதத்தை நிறுத்தவேண்டிய நிலை உருவாவதுடன், தேர்தலைப் பிற்போடமுடியாத நிலையும் ஏற்படும் எனத் தெரியவருகிறது.

இதேவேளை -

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்காக, இன்று கொழும்பில் விசேட மாநாடு ஒன்றை நடத்தவுள்ளார்.

இந்த மாநாட்டில், வடக்கு - கிழக்கிலுள்ள 7 தேர்தல் மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்களான மாவட்ட அரசாங்க அதிபர்களைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெண்புறா நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டு விழா!

(கிளிநொச்சி)

வெண்புறா நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவும், வெண்புறா பன்நோக்கு பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் -

நிறுவனத்தின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளதுடன், தொழில்சார் பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், செயற்கை உறுப்புக்கள் வழங்கலும் இடம்பெறுமென, வெண்புறா நிறுவன முகாமைக்குழு அறிவித்துள்ளது.

# ரோக்கியோ நிதியுதவிப் பயன்பாடு குறித்து ரணில் நாட்டு மக்களுக்கு விளக்குவார்!

## திறைசேரிச் செயலாளர் அறிவிப்பு

அண்மையில் நடந்து முடிந்த ரோக்கியோ மாநாட்டில், இலங்கைக்குக் கிடைத்த நிதியுதவிகள் தொடர்பாகவும், இந்த நிதியுதவியைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு விசேடஉரை ஒன்றின் மூலம் தெளிவுபடுத்தவிருப்பதாக திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்த தெரிவித்தார்.

ரோக்கியோவில் கிடைத்த நிதியுதவியைப் பயன்படுத்தி, உடனடியாகத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத்திட்டங்களை அமுலாக்கம் செய்வது குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தவாரம் கலந்துரையாடவுள்ளார்.



இந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் - நாட்டு மக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரைநிகழ்த்துவார்.

ரோக்கியோ நிதியைச் செலவிடுவதற்காக அரசியல் தலையீடற்ற நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்தும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சரித்த ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

# வர்ணப்பிரயோகம், ஆளுமை சரியாக அமைந்தால் ஓவியங்களும் மிகவும் சிறப்பானதாக அமையும்!

**ஓவியத்துறையில் பல பரிமாணங்களைப்பெற்றவரும், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில், விரிவுரையாளராகக் கடமையாற்றுபவருமான கலைமாமணி கணபதிப்பிள்ளை இராசரத்தினத்துடனான நேர்காணல்.**



*கேள்வி:* உங்களை இத்துறையில் ஈடுபாடுகொள்ளவைத்த காரணிகள் ஏதும் உண்டா? அல்லது நீங்களாகவே இத்துறையில் நுழைந்தீர்களா?

*பதில்:* அக்காலக் கோயில் சப்பற விழாக்களில், அலங்கரித்த சப்பறங்களைப் பார்த்திருக்கிறேன். எங்கள் வீட்டுத் திண்ணையில், எனது தந்தையார் வரைந்த காவடி ஓவியமே நான் பார்த்த முதல் ஓவியம். இவற்றின் பிரதிபலிப்புடன் கண், மனம், கை ஆகிய மூன்றும் ஒத்துப்போகும்போது, முழுமையான படைப்பை வெளிக்கொணர முடியும். இந்நிலை எனக்கு இருந்ததனால், இயற்கையாகவே எனக்கு இக்கலையில் ஈடுபாடு வந்தது.

*கேள்வி:* நீங்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே - சென்னைக்குச் சென்று, ஓவியத்துறையில் உயர் கல்வி கற்றதாக அறிகிறோம். அது பற்றி....?

*பதில்:* எனது திறமையை வெளிக்கொணர்வதற்கான வசதிகள் இங்கு இல்லாதபடியால் - வீ.வீரசிங்கம், ஆ.தியாகராஜா, எஸ்.ஆர்.கனகசபை ஆகியோரின் வேண்டுதலின் பேரிலேயே, 1984 இல் சென்னை சென்று ஓவியத்துறையில் கற்றேன்.

*கேள்வி:* சென்னையில் உங்களுக்குக் கிடைத்த அனுபவங்களுடன், யாழ்ப்பாணத்து ஓவியமுறையை ஒப்பிடுவீர்களா?

*பதில்:* யாழ்ப்பாணத்துக்கென்று தனியான ஓவியப்பாணி ஒன்று இருப்பதாக நான் அறியவில்லை. இருந்தபோதிலும் - பூநகரி பரமசாமி, தாவடி துரைசாமி ஆகிய இருவரும் குறிப்பிட்டத்தக்கவர்களாக இருந்துள்ளனர்.

இவர்கள் - கோயில் சுவர் ஓவியங்களை வரைந்துள்ளனர். இவர்களுடன், மூத்த ஓவியர்களான சாது சண்முகநாதன், சனா என்ற சண்முகநாதன், சுந்தரலிங்கம் போன்ற தனித்தன்மை வாய்ந்த ஓவியர்களும் இருந்துள்ளனர். இவர்கள், வியாபார நோக்கோடோ அல்லது பரப்பும் நோக்குடனோ தமது கலைப்பாணியை மேற்கொள்ளவில்லை.

*கேள்வி :* நீங்கள் ஒரு பிரதிமைக் கலை ஓவியர் என்றவகையில், பிரதிமைக்கலை ஓவியம் என்றால் என்ன? இதன் தோற்றம், இதனைப் பயிலக் காரணம் என்ன என்பது குறித்து விளக்குவீர்களா?

*பதில்:* பிரதிமை ஓவியங்கள் - உயிரோட்டமுடைய ஆக்கங்களாகும். இது, புகைப்படம்போல் அமையாது. ஆக்கமுறையில் அமைய வேண்டும். பிரதிமைக்கலை பற்றிச் சொல்வதானால், தனி ஒருவரின் மனிதமுகத்தைப் பிரதிசெய்வதே என்று கூறலாம். மனித உருவை வரைவதில் எனக்கிருந்த தனி ஆர்வமே, நான் இதனைப் பயிலக் காரணமாக அமைந்தது.

*கேள்வி:* உங்கள் ஓவியங்களில், ஓவியர் நடேசுவின் பாணி காணப்படுவதாகக் கூறுகிறார்கள், இதற்கான காரணம் என்ன?

*பதில்:* நான் ஆரம்பப் பாடசாலையில் படித்தபோதும், பின்னர் - மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்றபோதும், இவர் - எனக்கு ஆசிரியராக இருந்துள்ளார். இவரை எனது குருவாக ஏற்றுக்கொண்டேன். அவரின் தனித்தன்மையான கற்பித்தல் முறையும், வர்ணங்களைக் கையாளும் திறனுமே என்னைக் கவர்ந்துள்ளன.

*கேள்வி:* உங்களை ஓவிய உலகிற்கு இனங்காட்டிய ஓவியங்களைப் பற்றிக் கூறுவீர்களா?

*பதில்:* தைலவர்ணத்தில் நான் என்னை வரைந்த ஓவியம், கலாநிதி க.கைலாசபதி, பேராசிரியர் துரைராஜா ஆகியோரின் பிரதிமை ஓவியங்கள் மற்றும் கிராமத்திற்குத் திரும்பும் வண்டில், பொதுக்கிணற்றில் குளித்தல், திருவெம்பாவை போன்ற ஓவியங்களைக் குறிப்பிடலாம்.

*கேள்வி:* நீங்கள் ஓவியத்துறையில் பல பரிமாணங்களைப் பெற்று இப்போது விரிவுரையாளராக உள்ளீர்கள். உங்களுக்குக் கிடைத்த விருதுகள் பற்றிக் கூறுவீர்களா?

*பதில்:* மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் - "பிரதிமைக் கலைமாமணி", வடக்கு - கிழக்கு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் - "ஆளுநர் விருது", "கலாபூஷணம்" போன்ற பல விருதுகள் எனக்குத் தரப்பட்டன.

*கேள்வி:* உங்களது ஓவியங்களில் பச்சை வர்ணங்களின் தாக்கம் அதிகமாகத் தெரிகிறது. இதற்கான காரணம் என்னவென்று கூறுவீர்களா?

*பதில்:* பச்சையில் சில தன்மைகள் உள்ளன. பொதுவாக எல்லா வர்ணங்களுடனும் சேர்ந்து கொள்ளும். தனியே பச்சையைப் பாவிக்கக் கூடாது. வர்ண ஞான நிறைவு இருக்க வேண்டும். இதுவே, எனது ஓவியங்களில் பச்சைத் தாக்கம் அதிகமாக இருக்கக் காரணமாகும்.



இராசரத்தினத்தின் படைப்பொன்று

*கேள்வி:* இன்றைய இளம் ஓவியர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில்:* தமக்குள் இருக்கும் சக்தியை வெளிக்கொணரவேண்டும்.




அதைவிட்டு, பிறிதொருவரைப் பின்பற்றக்கூடாது. தங்களுக்கு என ஒரு தனிப்பாணியை வகுத்துக்கொள்ள வேண்டும். அதோடு - கண், கை, மனம் இவை ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போக வேண்டும். இவற்றுடன், வர்ண ஆளுமை பூரணமாக அறிந்தவராக இருக்க வேண்டும்.

**நேர்காணல்-விஜேந்திரன்**

*கேள்வி:* இத்துறைபற்றி இறுதியாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில்:* சுருதி சரியாக அமைந்தாலே, இராகம் தானாக வரும். அதேபோல், வர்ணப் பிரயோகம், ஆளுமை சரியாக அமைந்தால், ஓவியம் சிறப்பாக அமையும். நவீன ஓவியம் என்று நகலை உருவாக்குதல் அதன் வேலையல்ல. எதுவாக இருந்தாலும் அதுவாக இருக்கவேண்டும். இப்போது - ஏற்கனவே ஒருவரால் வரையப்பட்ட ஓவியங்களை தாங்கள் வரைந்ததாகச் சிலர் கூறுகிறார்கள். அது அவர்கள் வரைந்ததுதான். ஆனால், அவர்களின் தனி முயற்சி அல்ல. இவர்களின் செயல் தேசப்படம் வரைவது போன்றது.

வர்ணக்கலை பிரதானமானது. கூடுதலாகப் பதிவு நவிற்சிக் காரரின் முயற்சிக்கு நாம் நன்றி உடையவர்களாக இருக்கவேண்டும்.

---

## பாடசாலை கணினிமையத் திறப்புவிழாவில்

# சிங்கக்கொடி ஏற்ற மறுத்ததால் கல்வி அமைச்சர் வரவில்லை!

பாடசாலையில் சிங்கக்கொடி ஏற்ற மறுத்ததால், கணினிமையத் திறப்புவிழாவுக்கு வர, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மறுப்புத் தெரிவித்த சம்பவம் அக்கரைப்பற்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

பாடசாலைகள்தோறும் கணினி மையங்கள் நிறுவும் கல்வி அமைச்சின் திட்டத்துக்கமைய, முதற்தொகுதி கணினி மையங்கள் திறப்புவிழா, அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் கல்லூரி மற்றும் பாணமை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் கல்லூரியில் 20 கணினிகளைக் கொண்ட கணினி மையத்தைத் திறக்க அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், திறப்புவிழாவில் சிங்கக்கொடியேற்ற கல்லூரி நிர்வாகம் மறுத்துவிட்டது. இதனால், அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, இந்தத் திறப்புவிழாவில் கலந்து கொள்ளமுடியாதென மறுத்துவிட்டார். கல்வி அமைச்சின் செயலாளரே திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டார்.

அதேவேளை - குறிப்பிட்ட தினத்தில், அப்பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, அப்பகுதியிலுள்ள சிங்கள - முஸ்லிம் பாடசாலைகளுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு, கனடாவிலுள்ள பழைய மாணவர்கள் சங்கம் அன்பளிப்புச் செய்த இரண்டு கணினிகளை, பாடசாலையின் இளைப்பாறிய பிரதி அதிபர் வே.தனலட்சுமி, கல்லூரி அதிபரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (17)

### 10 பாடசாலைகளை ஜி.ரி.இசற். புனரமைப்பு

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில், மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் இயங்கும் 10 பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகளை ஜி.ரி.இசற் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது. மலசலகூட வசதி, கட்டட வசதி, தளபாடங்கள் போன்ற தேவைகளே, இந்த நிறுவனத்தால் நிறைவேற்றப்படவுள்ளன. இதற்கான கலந்துரையாடல் ஒன்று மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் நாளை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# சிரமதானம் மூலம் குளங்கள் புனரமைப்பு!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், இரண்டு விவசாயக் குளங்கள் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

கேவில் - போக்கறுப்பு கிராம சேவக அலுவலர் பிரிவில், கேவில் குளம், வேதக்குழக்குளம் ஆகியனவே சிரமதான மூலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்தச் சிரமதானப்பணிகளில் பங்கேற்பவர்களுக்கு சம்பளத்திற்குப் பதிலாக - உலர் உணவு வழங்கப்படுமென, கேவில் கிராம அலுவலர் தெரிவித்துள்ளார். (17)

## சின்னஞ்சிறு செய்திகள்

### உள்ளூராட்சி வாரத்தையொட்டி மரம் நாட்டு விழா!

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பிரதேசசபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, மரம் நடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை பிரதேசசபை பொதுநூல் நிலைய வளாகத்தில் மரம் நாட்டு விழா நடைபெற்றது. முதலாவது மரத்தை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி நாட்டிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து புலோலியிலுள்ள சகல பிரதேசசபை அலுவலர்கள், சனசமூக நிலையம், மந்திகைச் சந்தைப்பகுதி, பிரதான வீதிகளின் இருமருங்கிலும் மரம் நடுகை தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றது. (17)

### சர்வோதய நிறுவனம் போக்கறுப்பு மக்களுக்கு உதவி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, போக்கறுப்பு கிராம சேவை அலுவலர் பிரிவுக்கு, சர்வோதய நிறுவன அதிகாரிகள் கடந்த 13 ஆம் திகதி விஜயம் செய்தனர்.

இவர்கள் - கிராம அலுவலர் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடி, பல்வேறு புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளார்கள்.

20 கிணறுகள், 30 மலசலகூடங்களை அமைத்தல், கோழி வளர்ப்புக்கான உதவிகள், விவசாய உதவிகள் என்பன இந்த அமைப்பினால் வழங்கப்படவுள்ளது.

இதற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கு இப்பகுதிக் கிராம அலுவலர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. (17)

### சிறுவர் அரங்கு நிகழ்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 'சிறுவர் அரங்கு 2003' நிகழ்வுகள், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் ஒப்பனை நிகழ்வும் இடம்பெறவுள்ளதால், உரிய நேரத்திற்கு மாணவர்களைச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### கட்டுரைப் போட்டியில் இந்து மகளிர் மாணவிக்கு பரிசு!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த மார்ச் மாதம் மகளிர் விவகார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டு, தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் - சிரேஷ்ட பிரிவில், யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி ராதிகா முருகையா திறமைச்சித்திபெற்று, அதற்கான சான்றிதழையும் பணப்பரிசினையும் பெற்றுக்கொண்டார். (121)

### பனைமுறிந்து ஹையேஸ் வான் சேதம்!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு - சித்தங்கேணி வீதியில், வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹையேஸ் வான் ஒன்றின்மீது பனைமரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில், வான் சேதமடைந்தது.

அத்துடன்- மூன்று மின்கம்பங்களும் சேதமடைந்து, இப்பகுதியில் மின்சாரத்தடை ஏற்பட்டது. இச்சம்பவத்தால், இப்பகுதியில் சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்துத் தடை ஏற்பட்டது. பின்னர், அப்பகுதி மக்களால் பனைமரம் அகற்றப்பட்டுப் போக்குவரத்துச் சீர் செய்யப்பட்டது. (71)



அசே மாகாணத்தில் இந்தோனேஷியப் படைகளுக்கும் , போராளிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் சண்டையில்-மரத்தில் கட்டிய நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டவர் ஒருவரின் சடலத்தைக் கண்டு உறவினர்கள் திகைத்து நிற்கின்றனர்.

# ஈராக்கில் சினைப்பர் தாக்குதல்; ரோந்து சென்ற அமெரிக்கர் பலி!

## முக்கிய நகரங்களில் இரவிரவாகத் தேடுதல்

(பக்தாத்)

ஈராக்கில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அமெரிக்கப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதலில், ஒருவர் கொல்லப்பட்டார்.

நெஞ்சுப்பகுதியில் சூடுவாங்கிய இவருக்கு, முதலுதவி அளிக்கப்பட்டாலும், அவர் கடும் காயம் காரணமாகப் பலியானதாகவும், சினைப்பர் தாக்குதலை மேற்கொண்டவர் தப்பிவிட்டதாகவும் - அமெரிக்க இராணுவத்தின் பேச்சாளரான மேஜர் சீன் கிப்ஸன் கூறினார்.

ஈராக்கியர்களிடமிருந்தான ஆயுதங்களைக் களையவும் 'தேள் நடவடிக்கை' ஆரம்பிக்கப்பட்டு இரண்டாவது நாளில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுவரை இந்தநடவடிக்கையில் - 400 ஈராக்கியர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் ஈராக்கின் மத்திய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை - பக்தாத், திக்ரிட், கிர்குக் ஆகிய நகரங்களிலும் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் திடுதிடுப்பென நுழையும் அமெரிக்கப் படையினர் - சந்தேகத்திற்குரியோரை விசாரணை செய்வதாகவும், சில வீடுகளை அங்குலம் அங்குலமாகச் சோதனையிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இருவேறு சம்பவங்களில் - ஆர்.பி.ஜி தாக்குதல்களுக்கு இலக்காகி 4 அமெரிக்கப்படையினர் படுகாயமடைந்ததைத் தொடர்ந்து - புதிய தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



சீனத் தலைநகர் பீகிங்கில் 'சார்ஸ்' அச்சம் ஓய்ந்தாலும் - பொலிஸாரின் முன்னெச்சரிக்கை குறையவில்லை. பீகிங் ரயில் நிலையத்தில் நேற்றுப் பதிவானது இக்காட்சி.

### வாயு கொள்கலன் வெடித்ததில் எட்டுப்பேர் காயம்!

பிரிட்டனின் தென்பகுதியில் சமையல் வாயுக் கொளகலனொன்று திடீரென வெடித்ததில் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் இரண்டு சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். இச்சம்பவத்தில், வீடுகள் சிலவும் பலத்த சேதமடைந்தன.

இச்சம்பவத்தில் எவரும் உயிரிழக்காதது ஆச்சரியத்துக்குரியதே எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு விஜயம்



பாகிஸ்தான் ஜனாதிபதி, வெளிநாடுகளுக்கான தனது இரண்டுவார விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன் உட்பட முக்கிய நாடுகள் சிலவற்றுக்கும் முஷாரப் மேற்கொள்ளவுள்ள விஜயம், அல் - கொய்டாவுக்கு எதிரான பாகிஸ்தானின் அண்மைக்கால நடவடிக்கைளில் வரவேற்பைப் பெறும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.


இதேவேளை - இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் செல்வாக்கு, இஸ்லாமிய ஷரியத் சட்ட அமுலாக்கம், இராணுவ ஆட்சியை அகற்றுதல் போன்ற பல விடயங்களில் மேற்குலகு ஆர்வம் காட்டுமெனவும் அவதானிகள் கருதுகின்றனர்.

பாகிஸ்தானில் நடைமுறையிலிருக்கும் இஸ்லாமியச் சட்டங்களுக்கு எதிராக - தொடர்ந்தும் அங்கு போராட்டங்கள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

தனித்தே பெண்கள் உடற்பயிற்சியில் ஈடுபடவேண்டும், ஆண் வைத்தியர்கள் பெண் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க முடியாது, சம்பிரதாயமான உடைகள் மட்டுமே பகிரங்கமாகத் தோன்றும்போது அணியப்படவேண்டும், பொதுமக்கள் போக்குவரத்து வாகனங்களில் இசை ஒலிக்கப்படக்கூடாது போன்ற கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் அங்கு கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

### ஈராக் போர் பற்றி பிரிட்டிஷ் மக்கள் ஏமாற்றப்பட்டனரா?

# ரொனி பிளேயரைக் குறிவைக்கும் விசாரணை விரைவில் ஆரம்பம்!



பிளேயர்

(பக்தாத்)

ஈராக்கிடம் அழிவுதரக்கூடிய ஆயுதங்கள் இருந்ததாகக் கூறிப் போரை ஆரம்பித்த விடயத்தில் - பிரிட்டிஷ் அரசாங்கம் மக்களை ஏமாற்றியதா என்பது பற்றி ஆராய, அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளது.

வெளிவிவகார அலுவல்களுடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் விசாரணைக்குழுவின் முன்பாக - முதல் நாளன்று - ரொனி பிளேயரின் அமைச்சரவையிலிருந்து அண்மையில் வெளியேறிய ரொபின் குக்கும், கிளாயர் ஷோர்ட்டும் சாட்சியமளிக்கவுள்ளனர்.

ஈராக் மீதான தாக்குதலை ஆரம்பிக்கும் முன்னர் - ஐ.நாவின் அனுமதி பெறப்படவேண்டுமென வலியுறுத்தியும், அதனை பிரதமர் ரொனி பிளேயர் ஏற்காததால் - அவரது அமைச்சரவையிலிருந்து ரொபின் குக் வெளியேறினார்.

இதற்குப் பின்னர் - பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திப் பிரிவுக்கான செயலாளராகப் பதவியில் இருக்க ஆர்வமற்று கிளாயர் ஷோர்ட் இராஜினாமாச் செய்தார்.

இவர்கள் இருவரதும் சாட்சியங்கள் மிக முக்கியமானவையாகவும், ரொனி பிளேயரை அழுத்தத்திற்குள்ளாக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதேவேளை - இவ்வாறான பகிரங்க விசாரணைக்கு, பிரதமர் ரொனி பிளேயர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்.

ஈராக்கிடம் பேரழிவு தரும் அணு மற்றும் உயிரியல் ஆயுதங்கள் இருப்பதாகக் கூறியே - அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து போரை ஆரம்பித்தன.



ரொபின் குக்

ஆனால் - இதுவரையில் அவ்வாறான ஆயுதங்கள் எதுவும் ஈராக்கில் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க - முன்னாள் அமைச்சர் ரொபின் குக், நேற்று லண்டனில் செய்தியாளர்களுடன் பேசியபோது -

ஈராக்கில் இதுவரை இரசாயன ஆயுதத்தின் ஒரு ரவைக்கூட்டைக் கூட கண்டுபிடிக்கமுடியவில்லை. எனவே, பிரிட்டன் போருக்குள் வேண்டுமென்றே தள்ளப்பட்டிருப்பது புலனாகின்றது எனக் கூறியிருக்கிறார்.



ஆறே வயதான சிமொன்ரா பெரா என்ற இச்சிறுவன் - குடும்பப் பிழைப்புக்காக, இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தில், கொல்கத்தா மாநகரில் சோளம் விற்று வருகின்றான்.



கொளுத்தும் கோடை பாகிஸ்தானைக் கலக்குகிறது. இதுவரை 200 பேர் வெயிலுக்குப் பலியாகியுள்ளனர். இந்நிலையில் லாகூரிலுள்ள வாய்க்கலாலொன்றில் இப்படி ஓர் குதூகலம். 'வெயிலும் போச்சுது..! விளையாட்டும் ஆச்சுது' - என்ற கதை என்கிறீர்களா?


சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆனி மாதம் 05ம் நாள் (19.06.2003) வியாழக்கிழமை, காலை 10.45 மணி தொடக்கம் 1.00 மணிவரையுள்ள அவிட்ட நட்சத்திரமும், சித்தயோகமும் சிங்கலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில்

எமது புத்திரன் திருவளர் செல்வன்
பார்த்தீபன் (B.B.A)
(ஆசிரியர், உடுப்பிட்டி, அமெரிக்கன் மிஷன் கல்லூரி)
அவர்களுக்கும்



எமது ஏக புத்திரி திருவளர் செல்வி
சத்தியபாமா
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி. கந்தசாமி,
உடுப்பிட்டி

திரு. திருமதி. சி. கனகசபை,
189, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

(386)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## பெற்றோர், பாதுகாவலரால் துன்புறுத்தப்பட்டதால்

# கண்டியிலிருந்து வன்னிக்கு வந்த சிறுவர்கள்; உரியவாறு விடுதலைப்புலிகள் பாதுகாத்தனர்!

(கிளிநொச்சி)

பெற்றோர் பாதுகாவலர்களிடமிருந்து பிரிந்து, வீட்டைவிட்டு வெளியேறிய கண்டியைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள், கடந்த 7 ஆம் திகதி வன்னிக்கு வந்தபோது - முகமாலைச் சோதனைச்சாவடியில் வைத்து விடுதலைப் புலிகளால் இனங்காணப்பட்டனர். இச்சிறுவர்கள் மூவரும் உடனடியாகச் சிறுவர் இல்லங்களில் இணைக்கப்படுவதற்காக, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மூன்று சிறுவர்களையும் பொறுப்பேற்றுக்கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், சிறுவர்களின் மனநிலைகளை ஆழமாகக் கேட்டறிந்தபோது - அவர்கள், தாம் பெற்றோர்-பாதுகாவலரால் மோசமாகத் துன்புறுத்தப்பட்டதாலேயே வீட்டை விட்டு வெளியேறியதாகவும், தாம் படிக்க விரும்புவதாகவும் கூறினர்.

இதன் பிரகாரம் மூன்று சிறுவர்களும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் காந்தி நிலையம் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் அவர்கள் இணைக்கப்பட்டனர்.

இச்செய்தி, ஊடகங்கள் ஊடாக வெளியானதைத் தொடர்ந்து - நேற்று முன்தினம் மேற்படி சிறுவர்களின் பெற்றோர், பாதுகாவலர்கள், தம் பிள்ளைகளைத் தேடி வன்னி வந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

இதன்போது- 13 வயதுடைய-இராஜவெல்லவைச் சேர்ந்த, ஏ.மோகன்ராஜ் என்ற சிறுவன் பெற்றோருடன் செல்ல மறுத்துவிட்டார்.

மற்றைய சிறுவர்களான, திகனையைச் சேர்ந்த 12 வயதுடைய உமா மகேஸ்வரன் மதுசங்கர், 13 வயதுடைய மகேஸ் யூக்கபில் ஆகிய இருவரும் - சுயவிருப்பின் பேரில் பெற்றோருடன் செல்ல விருப்பம் தெரிவித்ததையடுத்து, இரு சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அனைத்திற்கும் தாம் பொறுப்பு எனப் பெற்றோர்கள் உறுதிமொழி அளித்ததன் பிரகாரம், இச்சிறுவர்களை, தமிழர் புனர்வாழ்வுக்கழ கப் பிரதிநிதிகள் உத்தியோகபூர்வமாக பெற்றோரிடம் நேற்று மாலை 3.30 மணியளவில் ஒப்படைத்தனர்.

## நாடும் நடப்பும்




# யாழில் ஈ.பி.டி.பி, வரதர் அணி அலுவலக பாதுகாப்பில் ராணுவம்!

## நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் அலுவலகங்களுக்கு - நேற்றுமுதல் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். நகரிலுள்ள ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி) ஆகிய கட்சிகளின் அலுவலகங்களுக்கே ஆயுதம்தாங்கிய இராணுவத்தினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இதன்படி -ஒவ்வொரு கட்சியின் அலுவலகத்திலும், இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (லி)

# அஸ்கிரிய மகாநாயக்கர் யாழ்ப்பாணம் வருகிறார்

அஸ்கிரிய பீடாதிபதி வண. புத்திரகித்த நாயக்க தேரோ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ள 'அமைதியை உறுதிப்படுத்தல்' என்ற மாநாட்டில் கலந்துகொள்ளவே அஸ்கிரிய பீடாதிபதி யாழ். வரவுள்ளார்.

இம்மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு, உலகத் தொழிலாளர் சம்மேளனத்தின் இலங்கைக்கிளைப் போஷகர், வண.மஹாகல் கடவெல பன்னாகார தேரோ மற்றும் பொதுசனத் தொடர்பு அதிகாரி வண.யோகன் தேவானந்த் ஆகியோரின் அழைப்பின் பேரிலேயே, அஸ்கிரிய மகாநாயக்கர் யாழ்ப்பாணம் வரவுள்ளார். (க)

# நயினை உற்சவத்துக்குச் செல்லும் வர்த்தகர்களுக்கு விசேட ஒழுங்கு!

நாளை ஆரம்பமாகவுள்ள - நயினாதீவு நாகபூஷணி அம்மன் உற்சவகாலத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள், ஊர்காவற்துறை ஊடாகச் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

குறிகட்டுவான் ஊடாகப் பெருமளவு மக்கள் செல்வதால் - மக்களுக்கு இடையூறு இல்லாதவகையில், வர்த்தக நடவடிக்கைகளுக்காகச் செல்பவர்கள் - ஊர்காவற்துறை ஊடாகத் தமது வ்ரததக நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள் எடுத்துச்செல்லலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - காரைநகர் கரம்பன் துறையூடாகவும் பக்தர்கள் செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வேலையாள் தேவை
வேலையாட்கள் உடன் தேவை
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
ரஹ்மான் ஹோட்டல்
226, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (385)

### வட-கிழக்கில்...

பட்ட கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் இப்போது நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை இல்லை.

விடுதலைப் புலிகளுடன், இப்போது போர் ஏற்படும் ஆபத்து எதுவும் இல்லை. மீண்டும் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதே அரசின் நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### அமெரிக்க....

இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஏற்கனவே இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் சனத்தொகை மற்றும் அகதிகள் விவகாரங்களுக்கான தூதுவர் ஜொய்ஸ் லீடர் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அலுவலர் கிறிஸ் லோங் ஆகியோர், நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

### ஜூலை...

கள் தொடர்பாகவும் - அரசுடனும், புலிகளுடனும் யசுசி அகாஷி பேச்சு நடத்தவுள்ளதாக - ஜப்பானிய இராஜதந்திரிகள் வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது.

அதேவேளை - இலங்கைக்கான விஜயத்துக்கு முன்னர், உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு, இந்தியாவுக்குச் செல்லும் யசுசி அகாஷி - ரோக்கியோ மாநாடு குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவிருக்கிறார்.

### ஜனாதிபதி....

6 மணிக்குத் தாக்கி மூழ்கடித்ததாகக் கடற்படைப் பேச்சாளர் கூறியபோது, ஜனாதிபதி செயலக அறிக்கையில் காலை 9 மணிக்கே கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இரண்டு முரண்பாடான அறிககைகள் எவ்வாறு வெளியாகின என்று கேள்வி எழுந்துள்ளது. அப்படியானால்- எந்த அறிக்கை கூறுவது உண்மையென சந்தேகம் எழுந்திருப்பதாகவும் கொழும்பில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

### புலிகளால்...

திற்கும் இடையில் 156 கடல் மைல் தூர இடைவெளி இருந்ததாகவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர் டோட்ரயர் தெரிவித்தார்.

கப்பல் மூழ்கியதாகக் குறிப்பிட்ட இடங்களைச் சென்று பார்வையிட்டபோதும், எங்குமே எண்ணெய்க் கசிவுகளையோ, தப்பியவர்களின் தடயங்களையோ அவதானிக்க முடியவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து, கண்காணிப்புக்குழு பூரணமாக விசாரணை நடத்திய பின்னரே அறிக்கை வெளியிடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### படையினரின்....

கண்ட கண்ட இடங்களில் போராளிகளைச் சோதனையிடுவது நிறுத்தப்படல் வேண்டும் எனவும்,

விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகங்களைச் சோதனையிட வேண்டுமாயின், வழமைபோல் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரே சோதனையிடலாம். படைத்தரப்பினர் சோதனையிடுவதை அனுமதிக்க முடியாது எனவும்,

பொதுமக்களை ஆத்திரமடையச் செய்துவிட்டு, அவர்கள் மீது தாக்குவது, துப்பாக்கிப் பிரயோகம் செய்வது உடன் நிறுத்தப்பட வேண்டும்,

பாதுகாப்பு என்ற போர்வையில், மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் வகையில்- இராணுவ நெருக்கடிகளைக் கொடுப்பது, புதிய இராணுவ முகாம்களை நிறுவுவது என்பன யுத்த நிறுத்த மீறல்களாகும். இவற்றை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் எனவும், கண்காணிப்புக் குழுவினிடம் விடுதலைப் புலிகளால் எடுத்துக் கூறப்பட்டது.

இவ்விடயங்கள் சம்பந்தமாக, படைத்தரப்புடன் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் - வழமையாகத் தம்மீது குற்றஞ்சுமத்தப்பட்டுவரும் கொலைகளுக்கும், தமது இயக்கத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை எனவும், விடுதலைப் புலிகளின் தரப்பினால் கண்காணிப்புக் குழுவினிடம் வலியுறுத்தப்பட்டது. (லி,09)

# பின்விளைவுக்கான புலிகள் அறிவிப்பு; பாரதூரமற்றதெனக் கருதமுடியாது!

## கப்பல் தகர்ப்பு பற்றி மகிந்த ராஜபக்ஷ

விடுலைப்புலிகளின் கப்பல் தாக்கப்பட்டதன் எதிரொலியாக, பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என, விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அச்சுறுத்தலை - பாரதூரமற்றதாகக் கருதமுடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற, சபாநாயகரின் விசேட அனுமதியூடான பேச்சிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக, அரசாங்கம் தனது நிலைப்பாட்டை நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வெளியே இடம்பெறும், சகல கொலைச்சம்பவங்களுக்கும், அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று, புலிகள் கூறுகின்றனர். இதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன? என்றும் மகிந்த ராஜபக்ஷ அங்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

# இரசாயனப் புகைக்குள் சிக்கி மூர்ச்சையடைந்த படைச்சிப்பாய்

## ஜானகபுர முன்னணி நிலையில் சம்பவம்

மணலாறு - ஜானகபுர இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண் பகுதியில், இரசாயன புகையைச் சுவாசித்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மயக்கமடைந்துள்ளார்.

மேற்படி முன்னணிக் காவலரணுக்கு வெளியே சில யார் தொலைவில், வெடிபொருள் ஒன்று வெடித்ததாகவும், இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் கடமையில் இருந்த சிப்பாய் மயக்கமடைந்து விழுந்துவிட்டதாகவும் படையினர் தெரிவித்தனர்.

வெடிபொருள் வெடித்த இடத்திலிருந்து பரவிய புகையை சுவாசித்தமையாலேயே அந்தச் சிப்பாய் மயக்கமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இச்சிப்பாய் உடனடியாக பதவியா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். பின்னர், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

# சிறுநீரக சிகிச்சைப்பிரிவு யாழில் இயங்க ஆரம்பித்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில், சிறுநீரக சிகிச்சைப் பிரிவு மீண்டும் நேற்றுமுதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த கால யுத்த நடவடிக்கையின் காரணமாக, செயலிழந்த நிலையில் இருந்த இப்பிரிவு - சிறுநீரக நோயாளிகளின் நன்மை கருதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவில், சிறுநீரகம் பழுதடைந்த நிலையிலுள்ளவர்களின் இரத்தம் மீளச்சுத்திகரிக்கப்படும். இச் சுத்திகரிப்பினால், இரத்தத்திலுள்ள யூரியாவின் வீதம் குறைவடைவதால், சிறுநீரகம் மீள செயற்படும் வாய்ப்பைப் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ரா,121)

# காணாமற்போன...

நிர்வாணமான நிலையில் காணப்பட்ட - சுயநினைவிழந்த நிலையில் பெண் ஒருவரையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

குறிப்பிட்ட பெண், பொலநறுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். உயிரிழந்தவரின் உடல் உறுப்புக்கள் சில, மேலதிக பரிசோதனைக்காக பேராதனை ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறித்த சார்ஜன்ட் இறந்து பல நாட்கள் எனவும், உடலைக் காட்டு விலங்குகள் கடித்து உண்ட காயங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலேயே, உயிரிழந்த ஆண-இராணுவத்தில் சார்ஜண்டாகப் பணியாற்றியவர் என்றும், ரஞ்சித் அபேரட்ண என்ற இவர் - கடமையில் இருந்தபோது, ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் காணாமற்போனவர் என்றும் தெரியவந்துள்ளது.

இவரது உடலருகே நினைவிழந்த நிலையில் காணப்பட்ட பெண்ணும், இராணுவ வைத்தியசாலையில் தாதியாகப் பணியாற்றும் மனோ கருணாரட்ண என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.